# தமிழ் நிலம்

## உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

## பாவலரேறு பெருஞ்சித்திரனுர்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 சிலை 25 (9 - 1 - 1983) விலை 65 காசு | இதழ் எண் : 9 | பகுதி 9-10


# ஆங்கிலப் பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படுகிறது; தமிழ் படிப்போர் தொகை குறைகிறது!

# இலங்கைத் தமிழர்களிடம் ஒற்றுமை இல்லை

# 'தமிழீழம் பெறுவது நடக்காது' - அது தேவையும் இல்லை, - என்கிருர் குன்றக்குடி அடிகளார் !

## அவரின் தமிழ் நோக்கும்; தமிழர் போக்கும்!

அண்மையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் குளித்தலையில் தமிழ் 'கா.சு' நினைவு இலக்கியக் குழுவினர் நடத்திய இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் பங்கேற்ருர்.

குளித்தலை ஆடவர் மேனிலைப்பள்ளி இலக்கிய மன்ற விழாவில் கலந்து கொண்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார் குளித்தலை வழிச்செல்வோர் விடுதியில் தங்கி ஓய்வு கொண்டார்.

மாலைப் பொழுதில் 'தமிழ் நிலம்' செய்தியாசிரியர் என்ற முறையில் நானும் தினமலர், தினகரன், மாலை முரசு, தினத்தந்தி செய்தியாளர்களும் அவரைக் காணக் காத்திருந்தோம்.

குளம்பி (Coffee) கொடுத்து இனிமையூட்டிய அவர் உதவியாளர் மூலம் எங்களைக் காண அழைத்தார்.

நாங்கள் அனைவரும் அவர் முன் பணிவுடன் வணக்கம் செலுத்தி இருக்கையில் அமர்ந்தோம். சிலபோது யாருமே அளவளாவத்தயங்கி வாளா இருந்தனர்.

நானும் அப்படி இருக்க என் மனம் ஒப்பவில்லை. அடிகளாரிடம் பல ஐயங்களைக் கேட்டுத் தெளிய வேண்டும் என்ற ஆற்ருமை பல ஆண்டுகளாகவே என்னுள் ஆழப் பதிந்திருந்தது. கிடைத்த வாய்ப்பினை இழக்க விரும்பவில்லை.

துணிவோடும் பணிவோடும் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன். உடன் அடிகளார் விடை கூறத் தயங்கினுர். நான் அவரின் இக்கட்டான சூழலைப் புரிந்து கொண்டேன்.

''தாளிகைச் செய்தியாக வெளிவராது; தாங்கள் தயங்காமல் மனம் திறந்து கூறலாம்.'' என்றேன்.

''எல்லாரும் அப்படித் தானு?'' என்ருர்.

''எல்லாரும் அப்படியே'' என்றேன். மற்றவர்களும் என்னுடன் சேர்ந்தனர்.

பின் அடிகளார் 'மடமட' என்று பல அரியகருத்துகளைக் கூறினுர். இடை இடையே நான் விடுத்த கூர்த்த வினுக்களுக்கும் தக்கவாறு விடையளித்தார்.

''சில செய்திகளைத் தாளிகைகளில் வெளியிடலாமா?'' என்று இசைவு கோரினேன். அடிகளாரும் ஒத்துக் கொண்டார்.

ஒரு தலையாய குறிப்பு என்னவென்ருல் மற்ற செய்தி

**அறிவின் முனைவன்**
நம் சிறப்புச் செய்தியாசிரியர்

யாளர்கள் அவரிடம் கேள்விகளை எழுப்பவே இல்லை என்பதே.

குன்றக்குடி அடிகளாரிடம் நான் கேட்ட கேள்விகளுக்கு அவர் கொடுத்த விடைகளைச் சுருக்கமாக இங்கு வெளியிட விரும்புகிறேன்.

அடிகளார் கூறினுர்:—

''மலேசிய நாட்டில் தமிழர்களுக்கு ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியாக இருக்கிறது. இதனுல் அவர்கள் மலை நாட்டில் உள்ள தேசிய மொழியினருடன் போட்டி போட முடியவில்லை: தமிழர்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப தங்களை ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டும். தமிழர்கள் வாழ்ந்தால்தான் தமிழ் வாழும். தமிழர்கள் தங்கள் வாழ்வை அடிப்படையில் ஊன்றிச் சீராக வளர்த்துக் கொள்ளுதல் நல்லது.

இலங்கை யாழ்ப்பாணத் தமிழர், மட்டக் கலப்பு தமிழர், மலையகத் தமிழர் என்று முப்பிரிவினர் உள்ளனர். இவர்களிடம் ஒற்றுமை இல்லை. சிங்களவர் புதிய குடியிருப்புகளை உருவாக்கிய போது தமிழர்களும் புதிய குடியிருப்புகளை உருவாக்கி இருக்கலாம். அரசும் அதற்கு ஆக்கம் அளித்தது. ஆனுல் தமிழர்கள் அதை உணரவில்லை. தமிழீழம் பெறுவது தமிழர்கள் பிரிவுணர்ச்சியால் நடக்காது என்றே கூறலாம்; அது தேவையும் இல்லை. ஒன்றிணைத்துத் தங்களை வளர்த்துக் கொள்ளுதலே சாலச்சிறந்தது.

தமிழைவிட தமிழர்கள் வாழ்வைப் பற்றித் தான் நினைக்கிறேன்'.

'இந்துமதம் இல்லை என்று ஒரு முறை கூறிய தாங்கள் ஓர் இக்கட்டான சூழலில் இருப்பதாக ஒப்புக் கொண்டீர்களே!' என்று நான் வினவியபோது,

அடிகளார் கூறினுர் 'இக்கட்டான சூழ்நிலை அன்று. ஆய்ந்து எடுத்த முடிவு. சைவம், வைணவம் போன்ற பல மதப்பிரிவுகளும் ஒன்ருக இணைந்துவிட்ட இந்து மதம் ஒன்றை ஒப்புக்கொள்வதால் தவறென்ன?'

'நம் உரிமைகளுக்குப் பாது காப்பில்லை என்ற போது நாம் எப்படி ஒற்றுமையைப் பேண முடியும். மொழி களைக் கடந்த நிலை இறை. இறை, தமிழ் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளாது என்று எப்படிச் சொல்ல முடியும் தமிழர்களுக்குத் தமிழ் வழி பாடு இல்லை என்ருல், தெய் வம் ஏற்காது என்ருல், அவ

(8-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

# குழந்தைகளுக்குப் பெயர் வைத்தல்

தமிழன் அடிமையாக இருக்கிறான் என விளங்குவ தில்லை 'நமக்கென்ன வீடு காடு. தோப்பு, துரவு, ஆடு எலலா மிருக்க, நாம யாருக்கு அடிமை? இவர்கள் ஏதோ இலலாததையும பொல்லாததையும் இட்டுச் கட்டிச் சொல் கிறார்கள்' என்றே எண்ணுகின்றனர். நம் வாழ்வில காணும் நிகழ்ச்சிகளை எண்ணியே பார்ப்பதில்லை. 'தமிழன் எண்ணிப்பார்க்கக் கூடாது என்பதே நம் சமயங்களின் நோக்கமாயிருக்கின்றதோ என எண்ண வேண்டியிருக் கின்றது. அவன் மூளையணுக்கள் அவ்வகையில் முடப்படுத் தப்பட்டிருக்கின்றன அவன அறிவடிமையாகிக் கிடக்கிறான்.

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு எதற்குப் பெயர் வைத்து அழைக்கிறோம்? எண்ணுகிறோமா? நம் அன்பை, அறிவை, ஆவலை, எதிர்பார்ப்பை யெல்லாம் உணர்வாகக் குழைத்து குழந்தைகளுக்குப் பெயராக வடித்து வாயார அழைத்து மனமார நிறைவடைவதற்குத் தானே பெயரிட வேண்டும்? ஆனால் இப்பொழுது நடப்பது என்ன? ஒரு பெண் குழந்தைக்கு 'விமலா' எனப் பெயரிடுகின்றோம் அஃதென்ன உணர்வைத் தருகின்றது? மலா என்றால் மலம் எனப் பொருள். வி என்றால் சிறந்த எனும் பொருள் தரும் முன்னொட்டு. எனவே சிறந்த மலம என்று குழந்தையை அழைப்பது? இல்லை. அதற்குச் சமய மெய்ப்பொருள் உண்டு எனத் தருக்கமிடலாம். சரி. எத்தனைப் பேர் அப்படிச் சமய மெய்ப் பொருளை எண்ணி, உணர்ந்து குழந்தைக்கு உணர்த்தியிருக்கிறார்கள்? ஏதோ ஓர் இடுகுறிப் பெயர் அவ்வளவுதான். எனவே எந்தக் குழந்தையும் இளமையி லிருந்தே எதனையும் எண்ணிப் பார்க்கும் பழக்கமில் லாமல் வளர்க்கப்படுகின்றது? பெற்றோர்களும் அதனை எண்ண விடுவதில்லை. இப்படி ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்ப்பது தானே சிந்தனை. சிந்திக்கும் திறன் தானே மக்களை விலங்குகளினின்றும் வேறுபடுத்தும் பண்பு. சிந்தனைத் திறனைப் பண்படுத்துவதற்குத் தானே கல்வி.

சில கல்வி, வேலை வாய்ப்பு நேர் காணல் (Interview) களில் ஒருவனின் நுண்ணறிவுஅளவை (Intelligent Quotient) ஆய்வதற்காகக் கேட்கப்படும் வினாக்களிற் சில ;

உன் பெயரின் பொருளென்ன ?

உன் பெயரே அமைந்த புலவரின் பாடல் ஒன்று சொல்.

உன் பெயரே அமைந்த அறிஞரின் கண்டு பிடிப்பு எது ?

உன் பெயரே அமைந்த வீரரின் வீரச் செயல் என்ன ?

இத்தகைய வினாக்களின் விடைகளின் சரி தவற்றை ஆராய்வதைவிட அவர்கள் விடையளிக்கும் பாங்கினையும் சிந்தனைப் போங்கினையும் அறிய உதவுகின்றன என உளவி யல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் வடநாட்டைச் சார்ந்த தேசிய மாணவர் படை அதிகாரி ஒருவரைக் கண்டு உரை யாட நேர்ந்தது. அவர் இந்து மதத்தில் மிகுந்த ஈடுபாடுள் ளவர் என அவர் பேச்சில் புலப்பட்டது. எங்கள் தமிழ மாணவர்களைப் பற்றி என்ன கருதுகிறீர்கள் ? அவர்களின் அறிவு, செயல் திறன் எப்படி என்று கேட்டு வந்தேன். ''உங்கள் பிள்ளைகளிற் பலர் அழகான தெய்வப் பெயர்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் பல மாணவர்களுக்கு, ஏன் நேற்றைய நேர்முகத் தேர்வில் ஒருவனுக்குக் கூட அவன் பெயரின் பொருளோ காரணமோ தெரியாமலிருக்கி றதே' எனக் குறைபட்டுக் கொண்டார். 'ஆசிரியர்களாகிய நீங்கள் ஏன் பெயர்களின் பொருள்களின் பொருளை விளக்கிச் சொல்வதில்லை?' (What a pity! why don't you teach the meanings of their names?) என்றார்.

இப்பணியை ஒரு கடமையாகக் கொண்டு செய்து வந்த காலஞ்சென்ற புலவர் பொன்னம்பலனாரைப் பற்றிக் கூறினேன்: 'ஆனால் மசையன், மண்ணுங்கட்டி, விமலா முதலிய பெயர்களை விளக்கும் பொழுது அதிலுள்ள மூடத் தனத்தையும் அயன் மொழிக்குத் தம இனம் அடிமையான வரலாற்றையும் விளக்கவேண்டி வந்தது. அதனைக் கேள்விப் பட்ட சில மேல் சாதிக்காரர்கள் அவருக்குக் கொடுத்த தொல்லைகள் அளவில்லை. ஆறு மாதத்திற் கொருமுறை சேலம், திருச்சி மாவட்டம் முழுவதும் ஊர் ஊராக மாற்றி னார்கள். எங்கள் தமிழர்களுக்குக் கல்வி என்பது 'செம்மறி யாட்டுப் போக்கில் போகப் பயிற்றப்படும் சடங்கு தான். அடிமைத் தொழிலுக்கு அவன் அணியமாக வேண்டும். அவ்வள்வுதான். உண்மையான தற்சிந்தனையைத் தூண் டினால் அது குற்றமாகக் கருதப்படுகிறது. எங்கள் இனத் தாரின் மனப்பான்மையையும் நீங்கள் பார்க்கவேண்டும். ஆசிரியரை மட்டும் நீங்கள் குறைப்பட்டுக் கொள்வதில் உண்மையில்லை.' என்றேன்.

முகலீம் படையெடுப்பினால் தம் இனம் அடைந்த இழப்புகளை விளக்கினார். இந்து முகலீம் கலவரத்தால் தம் உறவும் சுற்றமும் அடைந்த கொடுமைகளை உள்ளம் உருக வண்ணித்தார். 'நாமெல்லாம் இந்து அல்லவா? நமக்கு நம் பண்பாட்டின் மீது அக்கறை வேண்டாமா? நாட்டுப் பற்றில்லாத குடிமக்களால் நாடு எப்படிக் காக்கப் பெறும்? சிறிதளவு துன்பத்தையேனும் நீங்கள் ஏற்றுக் கொண்டு நாட்டிற்காக நீங்கள் இதனைச் செய்யக்கூடாதா?'' என்று உருக்கமாக வேண்டினார். அத்தனையும் பொறுமை யாகக் கேட்டுவ ேன் பிறகு சமயம்—சமயப் பூசலகள்— அவை தீர நேரிய வழிகளின் தேவை (Uniform civil code) —நாட்டிவம் (Notionlity) நாட்டினத்தின் பண்பாடு—அதற் கான களம்—சூழல்—பண்பாட்டு ஆளுமை (ஆதிக்கம்) இவற்றை விளக்கி, 'உங்கள் பண்பாடு பற்றி எனக்கு முழுமையாகத் தெரியாது. ஆனால் இந்து மதம் என நீங்கள் கூறுவது வருணாசிரம தர்மம். அது ஒரு நிறவெறிக் கொள்கை. உங்களுடைய நிலை போல பண்பாட்டு மோதல் களாக இல்லாமல் எங்களுக்கு இவ்வாரியக் கொள்கை அரத்தச் சிவப்பணுக்களை விழுங்கும் நோய் நுண்ணுயிரிகள் போல் சிவனிய, மாலியச் சமயங்களில் ஊடுருவி எங்கள் இனத்தின் தொன்மைத் தமிழ்ப் பண்பாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக அணு அணுவாக அரித்துச் சிதைத்திருக்கிறது. நாங்கள் இந்து மதம் என்ற பெயரால் வஞ்சிக்கப்பட்டு விட்டோம். அதனை மீட்க வள்ளலார் போன்ற மெய்யறி வாளர்களின் முயற்சியினை அறிவீர்களா ? அவரையும் எங்கள் மக்கள் உணராமற் போனார்கள் ! 'கடையைக் கட்டிக் கொண்டேன்' என உளம் வருந்தினார். மாந்த நேயம் ஒன்றே நீங்கள் சொல்லிய சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலக ஒருமை பேசியவர்கள் நாங்கள்'' எனத் தெளிவித்த பொழுது அவர் ஏற்கவும் முடியாமல் மறுக்கவுமியலாமல் திணறிய காட்சி இன்றும் என் மனக்கண் முன் நிற்கிறது. ஏறத்தாழ இது நடந்து பதினைந்து ஆண்டுகளாகியும் என் படிப்பும் பட்டறிவும் நான் கூறியவற்றிற்கு மேலும் சான்று கூறு கின்றனவேயன்றி மறுப்பதில்லை.

அது மட்டுமா? பிள்ளை பிறந்தவுடன் நம்மவர்களுக்குப் பெயர் வைப்பதற்குக் கருத்துரையாளர் ( Consultant )கள் யார் தெரியுமா ? கணியர் (சோசியர்)கள் தாம் ! அவர் களிடம் சென்றால், ''உங்கள் பிள்ளை பிறந்த நாண்மீனின் (நட்சத்திரம்)படி இந்தக் குற்றம் உள்ளது. எனவே 'மண் ணுங்கட்டி' என்று பெயர் வைத்து இந்தச் 'சாமி'க்கு ஆறு மாதம் வெள்ளிக்கிழமைதோறும் எட்டு நாள்(ஏதோ வாயில் வந்த எண் : ஆயினும் அதற்கு ஏதோ பெரிய பெருமை இருப்பதாகக் கருதும்படி கூறுவர்) எண்ணெய் விளக்கு வைத்து வா ' என்பர் (இந்தச் செலவு கணியரிடம் வருப வரின் செல்வநிலைக்கேற்ப மாறுபடும். வரவில் கணியர்க்கு மறைமுகமாகவோ அன்றி அவரைச் சார்ந்தவர்க்கோ பங்குண்டு.)

பள்ளிக்குச் சென்றால் அன்று அங்கும் ஆசிரியர்களாகப் பார்ப்பனரே இருப்பர் அல்லது பார்ப்பனிய அடிமைச் சற் சூத்திரர்களாயிருப்பர். ' அவர்கள் தம் பங்கிற்கு 'கருப்ப நாய்க்கன்' மூக்கையத் தேவன், மசைக் கவுண்டன்' என்று சூத்திரப்பட்டத்தைத் தவறாமல் சூட்டிப் பெயர் பதிவு செய்து விடுவர். (மறந்தும் அர் ஈறு கொடுத்துவிடார்·) அம்மம்ம! என் இனம் எவ்வெவ்வாறெல்லாம் கொத்திக் குலைக்கப் பட்டிருக்கிறது?

அண்மைப் பத்தாண்டுகளில் மட்டும் நிலைமை மாறி விட்டதா? படித்த பேராசிரியர்களே தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிட நாளும் கோளும் கற்றதாகக் கருதப்பெறும் கணியர் களிடம் தாமே செல்கின்றனர். அண்மையில் கல்லூரியில் வானியல், கணிதம் கற்றவரும் ஆங்கில இலக்கியத்தில் முது கலைப்பட்டம் பெற்றவருமான நண்பர் ஒருவர் தம் பெண் பிள்ளைக்குப் பெயரிட நல்ல தமிழ்ப் பெயர் வேண்டி என் னிடம் வந்தார். குழந்தையின் பிறந்த நாண்மீனின் படி பெயர் 'ல', 'லே', அல்லது 'டே'வில் தொடங்க வேண்டு மெனக் கணியர் கூறியிருப்பதாக மொழிந்தார். அதனை அவர் முழு நம்பிக்கையோடு ( Sincere ) கூறியதுதான் எனக்குப் பெரிய வியப்பாகவும் வெந்துயராயும் இருந்தது: அவர் என்பால் பொதுவான மதிப்பும் அன்பும் உள்ளவர். எனக்கு அவருடைய அறியாமையை எண்ணிச் சிரிப்பதா? அழுவதா ? ஒருவாறு என் உணர்வுகளை அடக்கிக் கொண்டு தமிழ்மொழி சிதைக்கப்பட்ட வரலாற்றினைக் கூறி தமிழ்ப் பெயர்கள் சிலவற்றையுங் கூறியனுப்பினேன். ''சரி, மனைவி யிடம் சொல்லிப் பார்க்கிறேன். அவளுக்கு இ'தெல்லாம் தெரியாது '' ( அவர் துணைவியாரும் அறிவியல் பட்டம் பெற்ற ஆசிரியை) பிறகு என்ன பெயர் முடிவாக வைக்கப் பெற்றது எனக் கேட்கவும் தயக்கம். ஏனெனில் அவர் மனமே அதனை முழுமையாகப் பற்றிக் கொண்டதாக எனக்குப் புலப்படவில்லை மனைவியைக் குறிப்பிட்டதே ஒரு சாக்குக் குத்தான்.

'நாம் அடிமையாக இருக்கிறோம்' என்பதை உணராம லிருப்பது தான் உண்மையான அடிமைத் தனம் என்று அறிஞர் ஒருவர் அடிமைத்தனத்தை, வரையறுத்ததுபோல் கூறியது என் நினைவுக்கு வந்தது. அஃது உண்மை தான்! ஆனால் வருத்தமாக இருக்கிறதே!

தென்மொழி ந. முத்துக்குமரன் அறி.இ.

# கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் பொய் !

தென்மொழி ந. முத்துக்குமரன், அறி. இ.

நம் நண்பர் ஒருவர் சமய ஈடுபாடுள்ள நலல பண் பாளர். அண்மையில் ஒரு நாள் அலுவலகத்தில் சோர்வாகக் காணப்பட் டார் என்ன, சோர்வா யிருக்கிறீர்கள்?' என்று வினவினேன்.

' வேறொன்றுமில்லை நேற்று ஓர் இழவிற்குச் சென்றிருந்தேன். சுடு காட்டிலேயே இரவு நெடு நேரமாகி விட்டது.' என்றார்.

'இரவு அவ்வளவு நேரம சுடுகாட்டில் என்ன செய் தீர்கள்?' என்றேன்

'அது ஒரு கதைங்க. இறந்து போனவரின் தமபி தம் மாமனார் வீட்டில் வாழாது வரு கிறார். தம்பி தமைய னாரின் இறுதிச் சடங் கிற்கு வரவேண்டும் ஆனால் அவரின் மாமனார், அளியர், (மைத்துனர்) மகன் ஆகியோர் சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குச் செல்ல 'மாலை' போட்டு விட்டனராம். இழவிற்குச் சென்றால் 'தீட்டு' ஆகி விடுமாம். எனவே எல் லாருமாகச் சேர்ந்து அவ் வூருக்குச் சென்று 'இழவு' ஏற்பட்ட வீட்டிற்கு அடுத்த தெருவில் அமர்ந்து கொண்டனர்.

இதில் இன்னொரு வேடிக்கை என்ன வென்றால் இந்த ஐயப்ப 'சாமி'கள் குழுவினருக்கும் தலைவராகிய 'குரு' சாமி இறந்தவருக்குப் பங்காளி உறவாகிறார். அவர் மாலையைக் கழற்றி வைத்துவிட்டு இழவுக்கு வந்திருந்து செய்ய வேண்டியவற்றைச் செய் தார் சவம் சுடுகாடு போக இரவு ஆகிவிட்டது. தம்பி வராமல் அடக்கம் செய் வதா? கூடாதா? என்ற தருக்கப்போர்' முடிந்து அடக்கம் செய்ய இரவு நெடுநேரம் ;ஆகிவிட்டது, என்றார்.

'சமயம் எப்படி மக் களின் பகுத்தறிவைப் பாழடித்து உறவைப் பகையாக்குகிறது பார்த் தீர்களா?' என்றேன்.

'இல்லைங்க, இதில் இன்னொன்றையு கவனிக்க வேண்டு அவர்கள் நம்மையெல் லாம் விட நுட்பமான அறிவாளிகள் இதையெல் லாம் அவர்கள் அறியாத வர்கள் என்று சொல்ல முடியாது. அவர்களுக்குள் சில மன வேக்காடுகள். சமயத்தை ஒரு போர்வை யாகப் பயன்படுத்திக் கொண்டார்கள என்று தான் சொல்லவேண்டும்' என்றார்.

மனப் புகைச்சலகளை மறைத்துக் கொள்ள சமயப் புனைவு ஒரு பூச்சுத் தானா? நல்லவேளை! இங்கு இந்த அளவோடு நின்றது. சில இடங்களில் திரிந்த மனங்கொண்ட மக் களுக்குச் சமயம் என்பது 'வெறிநாய்க்குச் சாராயம் ஊற்றியது போல்' ஆகி விடுவதை எண்ணிப் பார்த்தேன் இறைவா! இந்த உண்மைகளை எந்தத் தமிழர்க் எப்படி உணர்த் துவது? கண்ணால் காண் பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர ஆராய்வதே மெய்! மெய் காணும் வரை மக்கள் சிந்திப்பார்களா?

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 9-1-83—இதழ் எண்: 9 | பகுதி 9-10


# தென்னாட்டில் தேசியம் மதிப்பிழக்கிறது

அண்மையில் நடந்துமுடிந்த கருநாடக,ஆந்திர, திரிபுரா மாநிலத் தேர்தல் முடிவுகள் பலருக்கும் பல வகையிலும் அதிர்ச்சிகளைத் தந்திருக்கலாம். எப்படியும், இந்திராவின் தனிப்பட்ட அரசியல் கவர்ச்சியும், ஆட்சித் தந்திரங்களும் இனி, எடுபடா என்பதற்கு இத்தேர்தல் முடிவுகள் ஓர் எடுத்துக் காட்டாகும் என்பதில் ஐயமில்லை. நடுவணரசின் தேசியக் கொள்கைக்கு விழுந்த பெரிய அடியாகவும் இத் தேர்தல் முடிவுகளைக் கருதலாம்.

எவ்வாறேனும் தென்மாநிலங்கள் இனி, தங்களின் மொழி, இன, நாட்டு நிலைகளின் தனித் தன்மைகளைக் காத்துக்கொள்ள முற்பட்டுவிட்டன என்பதை எவரும் மறுத்துவிடவோ, மறைத்து விடவோ முடியாது என்பது, இத்தேர்தல் முடிவுகள் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

நடுவணரசு, இனி, தென்மாநிலங்களின் ஒட்டுமொத்த மான நலன்களில் அக்கறை செலுத்த வேண்டும். அதன் மொழி, இன, நாட்டு நலன்களைத் தேசியம், ஒருமைப்பாடு என்னும் பெயரில் அழித்துவிட முற்படக் கூடாது, என்பதை இந்திய முதலமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்வது நல்லது.

இந்தியைப் பரப்புவது, தென் மாநில வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் காட்டாமல், வட மாநிலங்களையே தொழில், உழவு, வாழ்வியல் முதலிய அனைத்து நலன்களுக்கும் உரியனவாகத் தேர்ந்தெடுப்பது, குடிநீர்ச்சிக்கலில் பிரித்தாளும் சூழ்ச்சிகளைக் கையாளுவது, இந்திய ஆட்சி முழுமையையும் ஒரு குடும்ப ஆளுமைக்கு உட்படுத்துவது, தம தனிப்பட்ட பெயரையும் புகழையும் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பொது மக்களின் வரிப்பணத்தை அளவிறந்து பயன்படுத்தி வீணாக்குவது, ஆரியச் சார்பான, கல்வி, கலைப் பண்புகளையே வளர்த்தெடுத்து, மற்ற இன மக்களிடம் அவற்றை ஆட்சி, அதிகார அழுத்தத்தால் புகுத்துவது, அவ்வம் மாநில நீண்ட நெடிய மொழி இனப் பண்பாட்டு மரபு வளர்ச்சிகளைத் தடுப்பது, மதங்களின் அறியாமை நிலைகளால், மக்கள் முன்னேற்றத்தை முடப்படுத்துவது, முதலாளியங்களுக்குத் துணை போவதன் வழி, ஏழை, எளிய மக்களின் வாழ்வியல் நலன்களில் அக்கறை கொள்ளாமல் இருப்பது, முதலிய தன் மூப்பான நடவடிக்கைகளை இந்திரா காந்தி, இனி, எஞ்சிய தன் அரசியல் வாழ்க்கையிலேனும் விட்டொழிப்பது பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். இதற்கொரு சிந்தனைத் தூண்டுகோலாக இத்தேர்தல் முடிவுகளை அவர் கருத்தில் இருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இனி, கருநாடக, ஆந்திர மாநிலங்களைக் கைப்பற்றியுள்ள மாநிலக் கட்சிகளும, இந்திராவின் அல்லையை ஒயச் செய்து விட்டதே தங்களின் முழு வெற்றியாக கருதிவிடாமல், தம் மாநில மக்களுக்கு ஒரு நல்லாட்சியை நிறுவிக் கொடுப்பதில், மக்கள் தங்களிடம் ஒப்படைத்த பொறுப்பாகவே அதைக் கருதிச் செயல்படுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

நாட்டில் இதுவரை ஏற்பட்ட ஒருவகையான அத்தனை முன்னேற்றங்களும், மிக மிக எழ்மையிலும் எளிமையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் நாலந்தா, மூன்றுத்தர மக்களுக்கு எட்டவே இல்லை. ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றியவர்களும், அவர்களுக்குத் துணை போகும் அதிகாரிகளும், செல்வர்களும், அறிவூட்டம் பெற்றவர்களும், கலைத்துறைக் கசடர்களும், தொழிலதுறை வணிகர்களும், கள்ளக்கடத்தல், கொள்ளையடிப்புக் குள்ளர்களுமே அவற்றைப் பங்கு போட்டுக் கொள்ளும் பேரவல நிலையை இனியும் வரவேற்கவோ, வாழ்விக்கவோ கூடாது. கருநாடக மாநிலத்தைக் கைப்பற்றப்போகும் மக்கள் (சனதா) கூட்டுக் கட்சியும், ஆந்திர மாநிலத்தைக் கைப்பற்றியிருக்கும் தெலுங்கு சேசக் கட்சியும், முழுக்க முழுக்க ஏழை, எளிய மக்களின் நலங்கருதும் வகையில் நல்ல முன்னேற்றத் திட்டங்களைக் கட்டுக் கோப்பாக வரையறுத்துக் கொண்டு, நடுவணரிடமிருந்து தேவையான அதிகார ஆளுமைகளைக் கேட்டுப் பெற்று, இந்தியா முழுவதுக்குமான நல்லாட்சியை அமைத்துக் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வகையில், அவர்களின் திட்டங்களுக்குத் தடையாக நிற்கும, அனைத்துத் தீய ஆற்றல்களையும் வென்று முறியடிக்க வேண்டும்.

மிகக் குறுகிய காலத்தில், இந்திராவின் வலிந்த வல்லதிகாரக் கைகளுக்கு முறிவேற்படுத்திய வகையில், தெலுங் தேசக் கட்சித் தலைவர் திரு. என். டி. இராமராவுக்கு நம் பாராட்டுகள். நாட்டின் அரசியல் ஆளுமையைக் கற்பனை தழுவிய திரைப்படத் தொழில் நுட்பங்கள் போல் கருதிவிடாமல், ஓர் உண்மையான உலகியல் பார்வையை அவர் பெறுதல் வேண்டும்.

உண்மைக்கு என்றேனும் ஒரு நாள் வலிவேற்பட்டே தீரும். பொய்யின் ஆட்சி, புளுகர்களின் துணையினாலேயே என்றும் நிலைத்துவிட முடியாது. தேசியம், ஒருமைப்பாடு பேசியே ஏழைகளின் ஒட்டியுலர்ந்த வயிறுகளை நிரப்பிக் குளிரச் செய்து விடமுடியாது என்பதை இந்திய ஆட்சியினர் இனியேனும் உணர்வது நல்லது. மொத்தத்தில் தென்னாட்டில் தேசியம் மதிப்பிழக்கிறது என்னும் உண்மையை கருநாடக, ஆந்திர மாநிலத் தேர்தல் முடிவுகள் தெளிவாக ஆட்சியினர்க்கு உணர்த்தி விட்டதாகவே நாங்கள் கருதுகிறோம்.

○

## ஓர் அதிர்ச்சி தரும் செய்தி!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் தென்மொழியின் (சுவடி: 19; ஓலை 5) சனவரி மாத இதழைப் பாருங்கள்! அதில் ஓர் அதிர்ச்சி தரும் செய்தி வெளியாகியிருக்கிறது. அச்செய்தியைப் படித்தவுடன் உங்கள் கருத்து என்ன என்பதை உடனே 'ஆசிரியர் தென்மொழி சென்னை-5' என்னும் முகவரிக்கு அன்போடு எழுதி அனுப்புங்கள்! உங்கள் கருத்தை நடுநிலையோடு ஆய்வு செய்வோம்.

அமைச்சர்
தென்மொழி
சென்னை-5.


## தமிழ் நிலம்

சிறப்பாசிரியர் :

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கன்னரிய ஆசிரியர் குழு. (Hony. Editorial Board)

பொறுப்பாசிரியர்

வினைவேந்தன், சென்னை-5

உறுப்பாசிரியர் குழு :

1. 'தமிழ்மம்' செம்பியன், சென்னை.
2. பாவலர். முத்தைலாவனன், செங்கை.
3. ந. முத்துக்குமரன, அ.தி.இ பல்லடம்.
4. இரா. ந. வீரப்பன், மலேசியா.
5. செந்தமிழ்ச்செல்வர் ப. அருளி, வளி.இ.க.இ., புதுவை.
6. கப. சுப்பிரமணியம், அந்தமான்.
7. மா. பூங்குன்றன், க.மு. சென்னை.
8. ப. மணிசேகரன், மே. செருமனி.
9. அ. பு. திருமாலன். மலேசியா

புரப்பாசிரியர் குழு :

1. பா. ஆறுமுகம், பல்லடம். 2. ப. துரையரசன். திருப்பூர். 3. கப. திருமாறன், நெல்லை. 4. நாரா. நம்பிநாடன், திருச்சி. 5. கோ. மங்கலநாதன், இராசிபுரம். 6. புலவர். கா. இளமாறன், க.மு. பு. புளியம்பட்டி. 7. நா இளமாறன், பவானி. 8. கோ. தமிழ்மகன, கோவை. 9. கு. மேழிவளவன், அ. பணசிப்பட்டி. 10. க. ஆதன்மன், திருவள்ளூர். 11. புலவர். மு. ஆறுமுகம், க.மு., சாத்தூர். 12. பா. பொ. இளங்கோ, கம்பம். 13. இரா. இளம்பிறைச்செல்வன். (பாலகங்காதரன்) பொறி. இ., திருச்சி. 14. மருத்துவர். ஆ. விசுவநாதன், சின்னசேலம். 15. த. சிவாலன், காட்டுமன்னார். 16. பாவலர். சா. சி. சுப்பையா, சப்போ, மலேசியா. 17. ச. இறையனார், சிங்கப்பூர். 18. பாவலர். முத்துப்பாண்டியன், பேராக். மலேசியா. 19. அ. தங்கராசன். சப்போ, மலேசியா. 20. க. சச்சிதானந்தன், தென்மேரா, பாடா

கட்டுரையாசிரியர் குழு :

1. பன்மொழிப்புலவர். கா. அப்பாத்துரையார், க. மு. சென்னை.
2. பேரா. கு. வெ. கி. ஆசான், க.மு. கோவை.
3. மெ. சிதம்பரனார், துணையாசிரியர், 'தமிழ்முரசு' சிங்கப்பூர்.
4. பண்டிதர். க. பொ. இரத்தினம், இலங்கை.
5. சிந்தனைச்செம்மல. கு. ச. ஆனந்தன், வளி. இ. க. இ., கோபி.
6. ஆட்சிமொழிக்காவலர். கீ. இராமலிங்கனார், க.மு. சென்னை.
7. பேரா. பா. க. ப. அறவாணன், சென்னை.
8. பேரா. இல. க. இரத்தினவேலு. மதுரை.
9. ப. பத்மநாபன், க. மு. க. இ. சோமனூர்.
10. புலவர். ச. சிவசங்கு, எரல்.
11. மருத்துவர் கோ. கோவிந்தனார், சென்னை.
12. புலவர். தீ. நா. அறிவுஒளி, க. மு., திருக்கழுக்குன்றம்.
13. பேரா. ம. அரங்கசாமி, கோபிசெட்டிபாளையம்.
14. பா. தாயம்மாள் அறவாணன்., செனகல்.
15. பேரா. சதாசிவம, க. மு., ஈரோடு
16. புலவா. பொதிகைச்செல்வன் க. மு.
17. அறிஞர். குறு. லெங்காதரர்.
18. கோ. மு. பெருமாள், அறி. இ. சென்னை.
19. மி. ஆரிறைவன். அறி. இ., தஞ்சாவூர்.
20. செம்பியன் வலைத்தரசு. சென்னை.
21. பாவலர். பெ. மணிவேலன் க. மு., அரூர்.
22. அ. தெ. தமிழ்நம்பி, விழுப்புரம்.
23. க. குழந்தைவேலன், க.மு. சென்னை.
24. பாவலர். கடலூர். மணிமாறன், க. மு. திருச்சி.
25. ந அன்பழகன், மன்னன் நீர்க்காபலை.
26. இரா. பாவாணன், புதுக்கோட்டை
27. தி. குமரப்பன், க. மு. மதுரை.
28. பாவலர். ம. நிறைவாணன், வேலூர்
29. இரணியன், க. மு. கோவை.
30. பா. ஆறிறைவன், சென்னை.
31. 'தமிழ்க்கடர்' மணிமுத்து. அறி. இ., பழனி.
32. உமாமகேசுவரன் (முகுந்தன்) இலங்கை.
33. மருத்துவர் சோ. இராசசுந்தரம், கொக்குவில், இலங்கை.
34. புலவர் நாவை-சிவம் மீனப்பாறை.

செய்தியாசிரியர் குழு :

1. புலவர். பொன். முகிலன், கூவலூர். 2. கி. இளஞ்சேரல் முதுபாண்டியன், மின்பானை 3. ச சின்னத்துரை, நெய்வேலி. 4 தென்னவன்கோ, நெல்லை 5. ப. முருகவேள். சென்னை. 6. குமர. தன்னொளியன், பாகாயம். 7. மு. உலகமுதல்வன், திருவண்ணாமலை. 8 கோ. நக்கீரன், சோளிங்கபுரம். 9. மா. செ. தமிழ்மணி, நெமலி. 10. புலவர். ந. அ. அண்ணாமலை, ஆலங்காயம். 11. புலவர். இரா. தமிழ்வேந்தன், எழில், இறையூர். 13. பொற்செழியன், வெங்காளூர். 14. 12. புலவர். கு. அண்டிரன், சின்னசேலம். 13. குழந்தை. சுசுவரசன், திருச்சி. 15. த. தமிழ்த்தென்றல், தஞ்சை. 16. மு. பழ. சதாசிவம். 17. அரங்க. தமிழ்மணி, கோவை. 18. க. தமிழப்பன், திருப்பூர். 19. செ வ. சேலம். 20. பாவ. இறையொளியன், தாராபுரம். 21. வி. செ. புகழேந்தி, கள்ளக்குறிச்சி. 22. நிலா. வெங்கடவன், ஈரோடு 23. புலவர். இரா. வேலவநயன், வி. க லவசு 24. தெ. இராவணன், விருதுநகர். 25. மு. பெ. பறம்பை சிவசண்முகம், முகவை. 26. கல்லை. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி. 27. சங்க. அறிவன், பரமக்குடி. 28. புலவர். ந. இரா. தமிழவேள், நரசிபுரம். 29. கோ. தமிழ்ச்செல்வன், திருக்குறுங்குடி. 30. திரு. தாமரைக்கோ, க. இ. முத்தரையர் பாளையம். 31. ப. சீரங்கசாமி, கோவை. 32. நா. தமிழவேள், பழங்கரை. 33. திரு. இரா அறிவின்பன், அந்தமான். 34. சி. தமிழ்க்குமரன், கிரமங்கலம். 35. புலவர். தே. விழுப்பரையன், விழுப்புரம். 36 துரைமடங்கன், கோவை. 37 இரா கழாரம்பன், வே. சந்தானம், அரூர். 38 அ. தமிழன்பன், கடையநல்லூர். 39 மு. குமரிச்செல்வன், திண்டுக்கல் 40. தா. மு தமிழ்படித்தன், குமரி. 41. மு. சிதம்பரநாதன், மணவாளக்குறிச்சி. 42. சா. தங்கராசு, குவாகம் 43 புலவர் ஆ. முகிலன், சிதம்பரம். உதகமண்டலம். 44 மெய் அருண்மொழியன், பெருவயல். 45. புலவர். ஆ. பு. கலிங்கனார், தா. வாடிப்பட்டி. 46. அ. எழிலன்பன், கண்டராதித்தம் 47. புலவர் க நாகிய திருவடியார், உளுந்தூர்ப்பேட்டை. 48. அ. பெ வளர்தமிழ் அறிவன், பேட்டை வாய்த்தலை. 49. புலவர். ந. தமிழவேள், கீழ. திருக்கோயிலூர். 50. வி. திருவள்ளுவன் இராசத்தான். 51. க மு குணசேகரன், இரங்கூன். 52. செல்லையா, கம்போர்னியா. 53 சி. கோபாலக்கிருட்டிணன், சவுதிஅரேபியா. 54. க. சுப்பிரமணியன், அபுதாபி. 55. மு.ந. குழ. வீரலிங்கம், இலண்டன். 56. நாரண திருவிடச்செல்வன், மலேசியா. 57 ஈழவேந்தன், கொழும்பு 58. தியாகேசுவரன், பிரான்சு 59. புட்பரதம், மொரிசியசு 60. எம். ஏ. சுவாமி, மணிலா. 61. ந. சிவலிங்கம், கனடா. 62. சி. தியாகராசா, நார்த்விச் (U.S.A) 63. மு. சிரீராமலு, இந்தோனேசியா, 64 உமாகாந்தன், பாரிசு. 65 க. சின்னப்பன், டர்பன். 66. பாவலர். காசிதாசன், கோலாலம்பூர்.

விளம்பர ஆசிரியர் குழு :

1. சி. இளமைவரம்பன், திருச்சி.
2. சோ. ஆற்றலரசு, சென்னை-5,
3. துரை-தென்னவன், சென்னை-10.
4. செ. கண்ணன், சென்னை-5.
5. க. இளங்கோவன், திருச்சி.
6. அழ. இளமுருகன், சென்னை-5.
7. மா. பொழிலன், சென்னை-3.

ஓவிய ஆசிரியர் குழு :

1. ப. அறவாழி, உடுமலைப்பேட்டை. 2. வி. சிங்கையன், சென்னை.


## ஓர் அறிவிப்பு

1882ஆம் ஆண்டு துலைத் (ஐப்பசி)த் திங்கள் 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று பிரான்சு வாழ் ஈழத் தமிழர்களால் தமிழீழ விடுதலையை முன்வைத்து இயங்கி வந்த இரு இயக்கங்களாகிய பிரான்சு தமிழர் இயக்கமும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் (பிரான்சு) ஒருங்கிணைந்து தமிழீழ விடுதலைக்குப் போராடுவதற்காக, பிரான்சு வாழ் தமிழ் மக்களின் ஒருமித்த ஒரே விடுதலை இயக்கமாகத் தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்சு) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

இத் தமிழீழ விடுதலைப் 'பேரவை, பிரான்சுவாழ் ஈழத் தமிழர்களின் படிநிகராளியாகத் தன்னியக்கமாக இயங்குகின்றது எனவும், இது வேறு எந்தவோர் அமைப்பின் கிளையாக இயங்காதெனவும், தமிழீழ மக்களின் நலனைக் குறித்து ஒரு சம அறப் பொதுவுடைமை அமைப்பு முறையில் தனித்தமிழீழ நாட்டை அமைக்கும் கொள்கை நோக்குடன், அதற்காகப் போராடவும் இயங்குகின்றது எனவும், தமிழீழ மக்களுக்கும், மற்றைய நாட்டு மக்களுக்கும் இப்பேரவை அறிவித்துக் கொள்கின்றது.

அத்துடன் இத்தமிழ்ழ விடுதலைப் பேரவை (பிரான்சு) தமிழின விடுதலைக் குரலாக ''தமிழ் முரசு'' என்னும் விடுதலை இதழை நளி (கார்த்திகை) மாதத்திலிருந்து வெளியிடுகின்றது எனவும் தெரிவித்துக் கொள்கின்றது.

நன்றி
பொதுச்செயலாளர்
தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

8, Rue Charles Moureu
75013 - Paris

தொடர்: 6

## வன்னி அரசர்களின் விடுதலைப் போர்

### வன்னி எல்லை

ஈழத்திலே பல பாகங்களிலும் வன்னியரசு இருந்தது. வன்னி நாடு இன்றைய சிங்கள நிலத்தில் ஒரு பகுதியையும், தமிழ் நிலப்பகுதியையும் உள்ளடக்கியதாகும். இப்பகுதியைப் பல குறுநில வன்னி அரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், திருக்கோணமலை, புத்தளம், மட்டக்கடப்பு, அநுராதபுரம் (நுவரகளவியா) ஆகிய இன்றைய மாவட்டங்கள் உள்ளடக்கிய - நிலப்பகுதியே அன்றைய வன்னியாட்சிப் பகுதியாகும். இதன் நீளம் வடக்குத் தெற்காக 71 கல்லும், கிழக்கு மேற்காக 60 கல்லுமாகும் என சே. பி. லூயிசு (J. P. Lewis) என்ற ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். இவர் இலங்கையில் அரசு அலுவலர் (CIVIL SERVANT) ஆக இருந்த பொழுது வன்னி மாவட்டங்களின் கை நூல் (Manuel of the Wanni Districts) என்ற ஆங்கில பொத்தக மொன்றை 1895-இல் எழுதியிருந்தார். அதில்:—

"The 'wanni' was the name given to the part of nothern Ceylon, which is bounded on the north by the Jaffna Lake on the South by the Aruvi River - and the District of Nuwavakalawiya, on the east by the District of Trinconalee and on the west by the District of Manner". எனக் குறிப்பிட்டுள்ளார். (பக்கம் 5)

வன்னிச் சிறப்பை எடுத்துக் கூறும் நாட்டுப் பாடல்களில் ஒன்று அதன் எல்லையைக் குறிப்பிடுவதாக அமைகிறது.

"எல்லை வடக்கில் எழில் யாழ் பரவு கடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை - நல்லதிருக்
கோணமலை கீழ்பால்—கேதீச் சரம்மேற்கில்—
மாணத் திகழ்வன்னி நாடு"

வன்னி நாட்டு வரலாறு "வையா பாடலிலும்" கோணேசர் கல்வெட்டிலும், மட்டக் களப்பு மான்மியத்திலும் தனியிடம் பெற்றுள்ளது.

### வன்னி (நாட்டின்) பெயரும், அதன் சிறப்புகளும்.

வன்னி என்ற சொல் நில அடிப்படையில் இன்று தமிழீழத்தின் பகுதியாகிய முல்லைத் தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களை மட்டும் குறிப்பதாகும். வேற்று நாட்டரசுகளின் படையெடுப்பை எதிர்த்து, அவர்களுக்கு அடங்காது தனியரசு நடாத்தியதால் வன்னி நாடு "அடங்காப் பற்று" எனச் சிறப்புப் பெயர் கொண்டதாகும்.

வன்னி என்னும் சொல் நெருப்பு என்னும் பொருளில் கந்தபுராணம் — 'காமதகனப்படலத்தில்' வருகின்றது. அடர்த்தியான பெருங்காடுகள் நிறைந்த நிலம் ஆகையால் வன்னி எனப் பெயர்பெற்றதும் என்பர். 'வையா' பாடலின் படி கி. மு. 50 - ஆம் ஆண்டளவில் தமிழ் நாட்டிலுள்ள மதுரை மன்னன் மகளாகிய சமதுதி என்பவளைத் தமிழ் மன்னன் அமைச்சர்களாக இருந்த 60 வன்னியர்களை மகளுக்குத் துணையாக ஈழம் அனுப்பி வைத்தான். அவ் வறுபது வன்னியர்களும் ஆங்காங்கே குடியேறிய பகுதியே வன்னி எனப் பெயர் பெற்றதும் என்பர்.

குளங்கள், அதைச் சார்ந்த நெல் வயற்புலம், அயலிலுள்ள மேட்டு நிலக்குடியிருப்பு, சிற்றூர்கள் சூழவுள்ள மரங்கள் அடர்ந்த காட்டு நிலம், இவ்வாறு முல்லையும், மருதமும் சேர்ந்த ஒரு நிலச் சூழலே 'வன்னி'யின் புறவுருவாகும். இந்த மக்கள் மண்ணை நம்பியே வாழ்ந்து, அந்த மண்ணிலே ஆண்டு தோறும் வெயர்வை சிந்திப் பாடுபட்டு வாழ்க்கையின் முகாமைத் தேவைகளை நிறைவு செய்யும் தன்னிறைவான குமுகாயப் பண்பாடு உடையவர்களாவர். தமிழீழத்தின் 60% உணவை உண்டு பண்ணும் உழவர்களைக் கொண்டது இந்நிலமாகும். வரலாற்றுக் காலத்தில் இங்கு நெல் விளைச்சல் பெரும் செல்வத்தை விளைவித்ததாகவும், மாடுகளுக்கு ஈடாக யானையைக் கட்டிச் சூடு மிதித்தார்கள் எனவும் கூறுவர். இவற்றை மெய்ப்பிப்பதற்கான பழைய விடுகதைகளில் ஒன்றினை நோக்கில தெளிவாகிறது.

"நாலுலக்கை குத்திவர, இரண்டு சுளகு புடைத்துவர குண்டான ஒத்த அகப்பை துழாவி வர தொண்டான் பொல்லு சுழன்றுவர; வருவது என்ன?

விடை: யானை.

இவ்விடுகதைகள் இன்றும் வன்னிச் சிற்றூர்ப் புறங்களில் வழக்கிலுள்ளதைக் காணலாம்.

### வன்னி நாட்டில் சிங்களக் குடியேற்றம்.

வளம் மிக்க வன்னிமண்ணைச் சிங்களவர்கள் இன்று தமதாக்கிக் கொண்டிருக்கின்றனர். 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தே வன்னி ஆட்சிப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டது முதல் முதலில் மண்டுக்கோட்டை (இன்று மடுக்கந்த) என்ற வவுனியாவுக்கருகாமையிலுள்ள சிற்றூரிலேயே முதற்சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. 1810ஆம் ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பின்படி வவுனியாவில் 30 சிங்களக் குடிகளே இருந்தனர் எனவும், இதில் மூவர் சிங்களச் சைவர் எனவும், இதைவிடத் தமிழர்களில் நால்வர் பௌத்தர்களாக இருந்தனர் எனவும் — செ. பி லூயிசு எழுதியுள்ளார். (Manuel of wanni) ஏறத்தாழ 80 ஆண்டுகட்குப் பின் 1891-இல் எடுத்த மக்கள் கணக்கெடுப்பின்படி வவுனியா மாவட்டத்தில் 76% தமிழரும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 92% தமிழரும் வாழ்ந்தனர். இதன்படி வவுனியா மாவட்டத்தில் 970 சிங்களவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் வாணிக நோக்கில் குடியேறிய 2 சிங்களவர்களும் இருந்தனர் எனவும் லூயிசு தெரிவித்துள்ளார்.

ஆரிய மதமும், வடமொழி ஆரியக் கலையொழுக்க மூட நம்பிக்கைகளும் எப்படிப் படிப்படியாகத் தமிழர்களுக்குள் புகுந்து, தமிழினத்தைப் பல்வேறு சாதிப் பிரிவுகளாக்கி, இன்று இந்து மதத்திற்கு அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றதோ, அதே போல் திட்டமிட்ட படிப்படியான சிங்களக் குடியேற்றமும் தமிழ் நிலத்தை விழுங்கியதும் அல்லாமல், தமிழர்கள் பலர் மொழிமதக் கலப்பினால் புதிய சிங்களவர்களாக மாறினர். வன்னியரசு ஒரு காலத்தில் அநுராதபுரம் வரை நீடித்திருந்தது எனவும் (வவுனியாவில் இருந்து அநுராதபுரம் தெற்கு நோக்கி 32 கல் எனக் கொள்க) அங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பான்மையினர் தமிழர்கள் எனவும் அறியக் கிடக்கின்றது.

மேலும் கண்டி அரசனின் சிறைக் காவலில் 22 ஆண்டுகள் இருந்து 1679-ஆம் ஆண்டு தப்பியோடிய, ரொபேட் நோக்சு என்ற ஆங்கில மாலுமி, தமது இலங்கைச் சிறை வாழ்வு பற்றி எழுதிய பொத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"1679-இல் இலங்கையை விட்டுத் தப்பிச் செல்வதற்காக வடக்கு நோக்கிச் சென்றபோது, மல்வத்து ஆற்றைக் கடந்து அநுராதபுரம் சென்றேன். அநுராதபுரப் பகுதியில் வாழ்ந்த மக்களுடன் சிங்களத்தில் பேச முடியவில்லை. அவர்கள் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட இனத்தவர்களாகக் காணப்பட்டார்கள். மலபார் (தமிழ்) மொழியிலேயே அவர்கள் என்னிடம் கேள்வி கேட்டார்கள். நான் அவர்களுடன் சிங்களத்தில் பேசிய போது அவர்களுக்கு எதுவுமே விளங்கவில்லை. அநுராதபுரத்திலே கண்டி அரசனின், அரசுத் தலைவருடனும் சிங்களத்திலே பேச முடியாமற் போக, மொழி பெயர்ப்பாளரை வைத்தே அரசுத் தலைவருடன் பேச முடிந்தது."

ஆனால் இன்று அநுராதபுரத்தில் மிகமிகக் குறைந்தளவிலான தமிழர்களே வாழ்கின்றனர். 17-ஆம் நூற்றாண்டிற்குப்பின் சிங்களவர்கள் படிப்படியாகக் குடியேறியது ஒருபுறம் இருக்க, தமிழர்கள் பெருமளவில் படிப்படியாகச் சிங்களவர்களாக இனம் மாறினர் என்பதே உண்மையாகும்.

ஆரியப் பார்ப்பவர்கள் இந்து சமய மூட நம்பிக்கைகளையும், வடமொழியையும் படிப்படியாக ஒரு காலத்தில் தமிழர்களிடையே புகுத்தினர்களாயினும், இன்றுள்ள புதிய பார்ப்பனர் எனக் கருதப்படும் தமிழர்களே தமிழில் வடமொழியையும் — இந்துமத மூட நம்பிக்கைகளையும் வேண்டுமென்று வலிந்து செயற்படுத்துபவர்களாகவும், ஏற்றுக் கொள்பவர்களாகவும் இருந்து வருவதைப் போலவே சிங்களர்கள் அநுராதபுரத்திலும், பொலனறுவையிலும் கடந்த காலங்களில் நடந்த இனக் கலவரத்தில் தமிழர்களை விலங்குத்தனமாகத் தாக்கிச் சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்களில் முதன்மையானவர்களாவர்.

இச்செயல் "தீட்டிய மரத்தில் கூர் பார்ப்பதைப் போல்" பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்தை நசுக்கி ஒழிக்கின்ற காடைத்தனச் செயலாகும். (தொடரும்)

**முகுந்தன்**
(உமாமகேசுவரன்)
தலைவர், தமிழீழ விடுதலை மக்கள் கழகம்.

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் நேருரையாடலும் சுற்றுச் செலவும்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவரும், மலேசியத் தமிழ இலக்கியக் கழகப் பொதுச்செயலருமான திரு. இர. ந. வீரப்பன், நவமபர் 25-இல் தமிழகக் கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களைக் கண்டு, பீசித்தீவில் 1983இல் நடைபெறும் 3ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழாவுக்கு ஒரு கலைக் குழுவுடன், தமிழாசிரியர் குழுவை அனுப்பியருளும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

1-12-82-இல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் அரங்கில், 'மலேசியாவில் தமிழர்-தமிழ் - இலக்கியம்' என்னும் பொருள்பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்.

2-12-82இல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற சென்னைச் செயலர் திரு. இரா. முத்துக்குமாரசுவாமியைக் கண்டு, 6-ஆவது உலகத் தமிழ் மாநாடு 1984இல் சனவரியில் நடைபெறும் என்ற உறுதியைப் பெற்றார்.

4-12-82இல் புதுவை, உள்ளாட்சித் துறை அமைச்சர் எசு. சௌரிராசன் அவர்களைக் கண்டு உரையாடி, தைத்திருவிழாவான பத்துமலைத் திருநாள் விழாவுக்கு அழைக்க, அவர் உடன்பட்டிருக்கிறார். அன்று, புதுவை முதலவர் தெ. இராமச்சந்திரன் அவர்களிடம் நேருரையாடி, பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளில் தமிழ்ப் பயில ஏற்பாடு செய்யவும், தமிழ்ப் படங்களை அனுப்பி, இயலிசை நாடகக் குழுவைப் போகச் செய்யுமாறும் வேண்டுகோளுக்கு இசைவு பெற்றார்.

அன்றும், மறுநாளும், புதுவை உ. த. ப. இ. கிளையின் சிறப்புக் கூட்டத்திலும், உறுப்பினர் பேரவையிலும் உரையாற்றிய திரு. வீரப்பன், கட்டொழுங்குடன் கிளையும், உறுப்பினர்களும் இயங்கிச் செயலாண்மை பெறுவதுடன், உலகில் தமிழர் தாய்மொழியை இழந்து வாடும் நிலையைப் போக்கும்படி அறைகூவல் விடுத்தார்.

தமது துணைவியாருடன் வந்துள்ள அவர் திண்டிவனம், செஞ்சி, திருவண்ணமலை, மாமல்லபுரம், வெங்களூர், மைசூர், கோவை, உதகை மற்றும் பல நகரங்களுக்கும் சென்று தஞ்சையில் அமைந்துள்ளார். நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் கண்டு உசாவினார்.

# இலங்கையில் உள்ள இந்தியத் தமிழரை இலங்கையர் ஆக்குக!

- இராச. வசந்தன்

இந்தியாவில், 1965-ஆம் ஆண்டு இந்திய - பாக்கித்தான் போரின்போது, இந்தியாவிற்குள் வந்து அசாம் பகுதியில் குடியேறிய மக்களை வெளிநாட்டவர் என்றும், அவர்களை வெளியேற்ற வேண்டும் என்றும் கூறி அசாம் மாணவர்கள் கோரிக்கையை நடுவணரசு ஏற்க மறுக்கிறது. அவ்வாறு அந்தக் காலக்கட்டத்தில் (1961 - 71) நுழைந்த மக்களை வெளிநாட்டவர் என்று கருதுவது, மாந்த உணர்வற்ற செயல் என்று நடுவணரசு எண்ணுகிறது. எனவே, 11 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த இம்மக்களுக்கு குடிவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில், அண்மைக் காலத்தில் சென்று குடியேறிய இந்தியர் முழுக் குடியுரிமை பெற்ற இங்கிலாந்து மக்களாகி விட்டனர். இவர்கள், தங்களது சமய உரிமைக்காகவும், பின்னாளில் வந்து குடியேறியோருக்கு மேலதிக உரிமை கோரியும் போராடுகின்றனர்.

பர்மாவில், இந்தியாவிலிருந்து சென்று குடியேறிய மக்களுடைய குடியுரிமை பற்றிய சிக்கல் பலகாலமாக இருந்து வந்தது. இதற்குத் தீர்வு காணுமுகத்தான் பிறப்பிக்கப்பட்ட '1982-ஆம் ஆண்டின் பர்மியக் குடியுரிமைச் சட்டம்' (Bu mese Citizenship Act 1982) 1948, ஜனவரி 4-ஆம் நாளுக்கு முன்னர் பர்மாவில் வாழ்ந்து வந்தவர்களும், அவர்களது மக்களும், பழைய குடியுரிமைச் சட்டங்களின் கீழ் உரிமை கேட்டு இதுவரை கோரிக்கை விடுத்திருக்கத் தவறியிருப்பின், தற்போது (Naturalised Citizenship) உரிமை பெற்றுக் கொள்ள வழிவகை செய்கின்றது. இது பற்றிய மேல் குறிப்புகள் இங்குத் தேவையில்லை. ஆனால் பர்மிய அரசின் இந்த நடவடிக்கை, இதுவரை இருமுறை அறியாமையால் தங்களின் வாய்ப்புகளை இழந்த, 34 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு சென்ற, இந்தியர்களுக்கு மற்றொரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதை மட்டும் குறிப்பிட்டால் போதுமானது.

ஆனால் இலங்கையிலோ, ஏறத்தாழ 150 ஆண்டுகட்கு முன்னர் சென்று குடியேறிய இந்திய வழித் தோன்றல்களான இந்தியத் தமிழர்களை (இலங்கைத் தமிழர்களை அன்று) இலங்கை அரசு இன்றைய நாள் வரை "நாடற்றோர்" என்று பெயரிட்டு, அங்கிருந்து இந்தியாவிற்கு வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. தமது நிலைமையை உணராமல் பேராசையிற் பிணிக்கப்பட்ட சிங்கள ஆட்சியாளர் தமது பண்பாடற்ற நிலையை இதன் மூலம் அருவருக்கத்தக்க முறையில் வெளிப்படுத்திக் கொள்கின்றனர். இருந்தும், இந்த அரசும் மாந்தர்களால் தான் நடத்தப்படுகிறது என்று நாம் நம்ப வேண்டியுள்ளது.

1964-ஆம் ஆண்டு சிரிமாவோ - சாத்திரி உடன்படிக்கை இந்தக் 'குரலற்ற' தமிழ்மக்கட்குத் தீமை செய்துள்ளது என்றால், 1970-இல் இந்த உடன்படிக்கைக்கு வழங்கப்பட்ட கால நீடிப்புக் கொடுமை செய்துள்ளது என்றே கூற வேண்டும். இந்த ஒப்பந்தம் கடந்த 31-10-81-இல் உயிரிழந்து விட்டது. ஆனால், இலங்கை அரசு இதனை மேலும் நீட்டிக்கவே விரும்புகிறது.

இந்திய அரசோ, மேற்படி நாள் வரை கோரிக்கை தந்துள்ளவர்களுக்கு மட்டுமே இந்தியக் குடியுரிமை அளிப்பது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இனி வரும் கோரிக்கைகள் ஏற்கப்பட மாட்டா என்றும் தெரிவித்துள்ளது. அரசின் இந்தநிலை பாராட்டத்தக்கதே. ஆனால், இலங்கை அரசோ, இந்த ஒப்பந்தத்திற்குக் கால வரம்பு ஏதும் கூடாது என்றும், ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைப்படியான மக்கள் இந்தியாவிற்கு வெளியேற்றப்படும் வரை ஒப்பந்தம் செல்லும் என்றும் கூறுகிறது.

இலங்கை அரசின் உள்ளெண்ணம், அங்குள்ள தமிழரை முடிந்தவரை இந்த வகையில் வெளியேற்றிய பின் மற்றவர்களை அடிமைகளாக, இரண்டாந்தர மக்களாக ஆக்குவது தான். கடந்த அக்டோபர் தேர்தலில் வெற்றி பெற்றதும், திரு. செயவர்த்தனே, வரும் மார்ச் மாதம் இந்தியாவிற்கு அணிசேரா நாடுகள் மாநாட்டிற்குச் செல்லும் போது இப்பொருள் தொடர்பாகத் தாம் பேசவிருப்பதாகக் கூறியுள்ளார். இதில் எந்த வகையில் தமது நயமையற்ற நிலையை எடுத்துக் கூறி, இந்திய அரசை இணங்க வைப்பார் என்று தெரியவில்லை. ஆனால தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதற்காக ஆவன செய்தல் உடனடித் தேவை.

இலங்கையில் உள்ள இந்திய வழித்தோன்றல்களான தமிழர்கள் 'நாடற்றோர்' அல்லர்; அவர்கள் இலங்கையர் தாம்! இலங்கையின் முழு உரிமை பெற்ற குடிமக்களாக வாழவே அவர்கள் விரும்புகின்றனர். இக்கட்டுரைத் தொடக்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளவாறு இந்தியா, இங்கிலாந்து, பர்மா ஆகிய நாடுகள் இந்தச் சிக்கலை அணுகும்முறை மாதிரியே இலங்கை அரசும் நடக்க வேண்டியதுதான் நாகரிகமும் பண்பாடும் ஆகும்.

# தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழர் இருபது பேர் பயிற்சி

தஞ்சை—திச. 18 முதல் சனவரி 16-ஆம் பக்கல் வரை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கீழ்க்காணும் நாடுகளின் பேராளர்கள், 'தமிழ்ப் பண்பாடு ஓர் அறிமுகம்' என்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

1. தென்னாப்பிரிக்கா: திரு. ஏ. எம். பிள்ளை, திரு. பி. பி. பிள்ளை, திரு பெருமாள். 2. மொரிசியசு: திருவாளர்கள் கே. சொர்ணம், ஐ. அம்மிகன். 3. இலண்டன்: திரு. கே. ஞானசூரியன், திரு. எம். கிருட்ணமூர்த்தி. 4. பீசித்தீவு: திருவாட்டி. சீத்தாலட்சுமி (ஐயர்) திருவாட்டி தனலட்சுமி (ரெட்டி). 5. தமிழீழம்: செல்வி பாலயோகினி ஞானசாகரம். 6. மலேசியா: திரு. இர. ந. வீரப்பன், திரு. கி. இராமன், திரு இரா. வடிவேல், திரு. பி. பழனியப்பன், செல்வி சூசான் ஊர் சிதன். மற்றும் டர்பன் திருவாட்டி புட்பம்மாள் முருகன், செல்வி திருமுகம், திரு. ஆர். ஏ. முருகன் ஆகியோர் உட்பட இருபதின்மர் இவர்களாகும்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் பலர் இவர்களில் இருப்பது குறிக்கத் தக்கது. விடுமுறை வாய்ப்பற்ற சிங்கப்பூர், இலங்கை, மற்றும் சில நாட்டுப் பேராளர்கள் இவ்வகுப்பில் பங்குபற்ற இயலாததும் குறிப்பிடத்தக்கது.

திரு. இர. ந. வீரப்பன் 18-12-82-ல் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வி. ஐ. சுப்பிரமணியன் அவர்களிடம் நேருரையாடினார். அயலகத் துறை மூலம் இப்பயிற்சி நடைபெறுவதாகவும், பல நாட்டுத் தமிழ்ப் பேராளர்கள் மூலம் அவர்களின் தமிழ் பயிலத் தடைகளை அறிய விருப்பதாகவும், அவற்றைக் களைவதாகவும் குறிப்பிட்டார். மற்றும் அறிவியல் புலம் இயக்குநர் பர் தி. முருகரத்தினம், நூலகர் பத்மநாதன் ஆகியோரையும் கண்டார். மலேசிய-சிங்கப்பூர் தமிழ் நூல்களை இந் நூலகம் வாங்குவதற்கான உறுதிப்பாடும் இவர்மூலம் செய்யப்பட்டது.

பயிற்சியில் பங்கு பற்றியுள்ள இவர்களுக்கான பயிற்சியுடன், தேர்வும், பத்துப் பேரூர்களைப் பார்க்கும் சுற்றுலாவும் நிகழவிருப்பதாக அறிகிறோம். தமிழக அரசு மூலம் இப்பல்கலைக் கழகத்தின் பல பயனுள்ள துறை முறைகளைப் பெற இருப்பதாகவும் கருதப் படுவதாக அவர் சொன்னார்.

## அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள். — அமைச்சர்

ஆசிரியருக்கு கடிதம்

# தவறு செய்ய முந்துகிறது தமிழக அரசு

அய்யா,

"கல்வி வகையிலும் குமுகாய மதிப்பு வகையிலும் பின் தங்கியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 50 விழுக்காட்டு ஒதுக்கீட்டில் பொருளியல் வகையில் குறைவுப்பட்டுள்ள முன்னேறிய வகுப்பினருக்கும் பங்கு கொடுக்க வேண்டும்" என்று தமிழக அரசு சிந்தித்து வருவதாக, 17-12-82-இல் தமிழக முதல்வர் பேசியுள்ளார். முன்னேறிய வகுப்பினரில் பொருளியல் வலிவு குன்றியவர்கள் என்பவர்களை ஒதுக்கீட்டுப் பட்டியலுக்குள் நுழைத்து ஒதுக்கீட்டுக் கோட்பாட்டையே அழித்துவிடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள மேல்சாதிக்காரர்கள் தங்கள் முயற்சியில் கணிசமாக வெற்றி பெற்றுவிட்டார்கள் என்பதையே முதல்வரின் இந்தப் பேச்சு உணர்த்துகிறது...

இந்தச் சிக்கலை அணுகும்போது, சில முகாமையான வரலாற்று உண்மைகளை நாம் மறந்துவிடக் கூடாது; நாட்டு மக்களிலே பெரும்பாலோர் கல்வி வகையிலும் குமுகாய மதிப்பு வகையிலும் பின் தள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்குச் சாதி அடிப்படையிலேயே கல்வியும் குமுகாய மதிப்பும் மறுக்கப்பட்டு வந்துள்ளன என்பது வரலாறு. அந்த வரலாற்றைத் திருத்திக் குமுகாயச் சமநிலையை உருவாக்கப் புறப்படும் எந்த அரசும், அதே அடிப்படையிலேதான், அஃதாவது சாதி அடிப்படையிலே தான் ஒதுக்கீட்டைச் செய்து, பின் தங்கியவர்களை உயர்த்த முனைய வேண்டும். முன்னேறிய சாதியார்களின் கள்ளக் கண்ணீர்களைக் கண்டு, இந்தப் பெரிய வரலாற்று உண்மையை மறந்துவிடக் கூடாது.

சாதி உணர்ச்சி இன்னமும் எவ்வளவு உறுதியாக வேலை செய்கிறது என்பதை என்னுடைய பட்டறிவிலிருந்தே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்; தில்லி மாநகரிலே மேல் சாதியாரின் ஆளுமையில் உள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் க. மு. (முதல் வகுப்பு), இல. மு. (எம்.லிட்.) (ஆராய்ச்சிப்) பட்டங்கள பெற்ற என் மனைவிக்குக் கிடைத்திருக்க வேண்டிய ஒரு பதவியை மொட்டையான மூன்றாம் வகுப்பு க. மு. (எம். ஏ.) பட்டமுடைய மேல்சாதிக்காரர் ஒருவருக்குக் கொடுத்தார்கள்.

இது 1960 இல் இருந்த நிலைமை. இப்போதைய (1982) நிலை என்ன? வேலையில்லாத் திண்டாட்டம் மிகுதியாக உள்ள இந்த நாளிலே கூட, என்னிடம் படித்துப் பட்டம் பெறும் இரண்டு தமிழ்க் குழந்தைகளில் மேல்சாதிக் குழந்தைக்கு உடனேயே வேலை கிடைத்து விடுகிறது; தாழ்த்தப்பட்ட அல்லது பின் தங்கிய குழந்தைக்கு வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது.

ஏன் இப்படி என்றால், — முன்னேறிய மேல்வகுப்பார் அரசுத்துறையிலும் தனியார் துறையிலும் மிகப் பரவலாக இருப்பதால், தங்கள் சாதிக்காரர்களுக்கு "எப்படியாவது" விரைவில் வேலை தேடி விடுகிறார்கள். ஆமாம்! முழுக்க முழுக்கச் சாதி அடிப்படையிலேயே அவர்கள் செயல்படுகிறார்கள். வருமானம் குறைந்த மேல் சாதிப் பையனுக்கும் பெண்ணுக்கும் உள்ள இந்தப் (சாதிப்) பாதுகாப்பு, எந்த இடத்திலும் தாழ்த்தப்பட்டோருக்கும் இல்லவே இல்லை. எனவே, பிற்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குந் தாம் அரசின் (ஒதுக்கீட்டுப்) பாதுகாப்புத் தேவை.

நடைமுறையாக உள்ள இந்த உண்மையை மறந்துவிட்டு, முன்னேறிய மேல் சாதியாருக்கும் ஒதுக்கீடு கொடுக்க முனைந்தால்,—அவர்கள், தங்கள் சாதியின் பாதுகாப்பு, அரசின் சலுகை என்னும் இரட்டை உதவியைப் பெற்று மீண்டும் மற்றவர்களைப் பின் தள்ளி விடுவார்கள் என்பதைத் தமிழக அரசுக்கு எடுத்துக் காட்டி எச்சரிக்க விரும்புகிறேன்.

(புதுதில்லி) தங்கல் சென்னை-86 } முனைவர். சாலை இளந்திரையன்

# தமிழினம் தலைதூக்கத் தூக்கப் பகையினம் தூளாய்ப் பறக்கும்!

— பறம்பை அறிவன்

தமிழினம் ஒன்றாய்த் தலைதூக்கத் தூக்க
பகையினம் தூளாய்ப் பறக்கும் பறக்கும்;

விடியலை நோக்கி நடக்க நடக்க
இருட்குலை வீழ்ந்து சிதறும் சிதறும்;
அடிநிலை தொட்டு அடர்ந்த பிழைகள்
இடிபட ஒன்றாய் இணைவோம்; இணைவோம்!

உலகினில் உள்ள இனங்கள் தேசிய
உணர்வுகள் தம்மை உரிமை எழுச்சியை
ஒப்பிடும் தன்மையில் ஒன்றெனத் தோள்தரும்
தோழமை தன்னில் உயர்ந்தோர் தமிழராம்!

முடமனம் நீக்கி முதலெழில் அன்னை
இடமுள நாடெல்லாம் தன்பண்பாட் டெல்லை
திடமுற ஊன்றித் திகழ்தன் சிறப்பினைத்
தீட்டுவான் ஓவியம் போல விளக்கமாய்!

# அயல்நாடுகளில் வாழும் தமிழர்கட்குத் தமிழகம் எப்படி உதவலாம்

அருணாசலம் ... (மொரீசியசு)

[illegible]

[illegible]

ஓர் இனத்தின் அடையாளம் அவ்வினம் பேசுகின்ற மொழி வழியே இனமறிந்து கொள்ளப்படும் என்பது அறிஞர் கூற்று. [illegible]

[illegible]

# " நாளும் புகழைத் தேக்குவோம் "

உலகில் நல்ல தமிழர் யாரும்
நன்று பட்டு வாழுவோம்
ஒருவருக்கே இன்னலேனும்
ஓட்டு [illegible] சூழுவோம் !

நிலவு இளைய நயமை, நேர்மை
நெறியில் வென்றும் செல்லுவோம் !
நெஞ்சில் [illegible] அச்சமின்றி
நேரும் பகையை வெல்லுவோம் !

விலங்கினைப்போல அறிவு கெட்டு
'விதி'யை நம்பி வாழ்வதோ ?
விளக்க முற்ற தமிழ அன்னை
வீணர் முன்னே தாழ்வதோ?

தலைமை மிக்கும் புலமை பெற்று
[illegible] தன்னை நீக்குவோம்;
நாடு வாழ நம்மை ஈந்து
நாளும் புகழைத் தேக்குவோம் !

-கார்முகில்
இலாலாப்பேட்டை

# வானொலியில் வாலாட்டம்

கடந்த 16-12-82 வியாழன் இரவு 9.30 மணிக்குச் சென்னை வானொலியில் ஓர் இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. அவர்கள் அறிவித்தபடி கலந்து கொண்டோரும் தலைப்பும் வருமாறு:

1. பிரதிபா ராஜகோபாலன் 2. [illegible] 3. [illegible] ஆகியோர் உரையாற்றினர்.

'வாசகர் பிரக்ஞை' இன்று வளர்ந்துள்ளதா?' என்பது தலைப்பு.

நாவலாசிரியர்கள் (இதழ்கள்) நிறைய விற்கவேண்டு மென்ற நோக்கோடு அருவருப்பான (ஆபாசப்) படைப்புகளை வெளியிடுகிறார்கள்; படிப்போரும் பெரும்பாலும் அவற்றை விரும்பிப் படிக்கின்றனர்; திரைப்படச் சாய்காலும் இதற்கு ஒரு காரணியம் என்றெல்லாம் பேசப்பட்டது. இச்சூழலில் சிக்கி எழுதுவோரும் நிலைதாழ்ந்து எழுத வேண்டியதாகி விடுகிறது. நிறையவு வளர்ந்து படைப்போரும் படிப்போரும் நெருங்கி வந்து பேசி நல்ல இலக்கியங்கள் உருவாக ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர்கள் பேசியதன் உட்கருத்து இருந்தது.

ஒரு திட்டமும் தெளிவும் இன்றி ஒரு மழுப்பலாக முடிந்தது அந்த உரையாடல் இருக்கட்டும்.

அதென்ன தலைப்பு? வாசகர் பிரக்ஞை வளர்ந்திருக்கிறதா? தமிழகத்தில் தமிழர்களுக்காகத் தமிழ் இலக்கியம் பற்றி இவர்கள் நிகழ்ச்சி நடத்துகின்றார்கள்! என்னே மொழியுணர்வு?

படைப்போர் உணர்வு படிப்போர் நிலை என்றெல்லாம் கூறினால் நம்மால் அந்த வழக்கில் இல்லாத சொற்களை விளங்கிக் சொள்ள முடியுமா, என்ன?

இந்தப் 'பிரதிபா'க்களும் 'சிரஷ்டி'களும் நன்றாகத் தான் தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்குப் 'பிரக்ஞை' ஊட்டினார்கள்!

காசுக்காக அருவருப்பு (ஆபாச) அழுகல்களை அள்ளி வீசி விட்டுப் புறங்கையில் விரலிடுக்கில் வழியும் எச்சிலைச் சப்புக்கொட்டி உள்ளூற மகிழ்ந்துகொள்ளும் எழுத்தாளர்களையும், இதழ் நடத்துவோரையும் வன்மையாகக் கண்டிக்க இவர்களுக்கு வக்கில்லை.

வேற்று மொழிச் சொற்களை விரவிப் பேசிக்கொண்ட இவர்கள், அறிவு உயிரி (ஜீவி)கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலரை எள்ளிப் பேசினார்கள். அதே போது தாங்கள்தாம் அந்த அறிவு உயிரிகள் என்பதுபோல் மறைமுகமாக வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டார்கள்.

இவர்கள் தங்களைப்பற்றித் தாங்களே மிக மிதப்பாக எண்ணிக் கொண்டு, தங்களைச் சுற்றித் தாங்களே ஒரு போலியான - அதே போது பசட்டான-கூட்டைப் பின்னிக்கொண்டு பேசியது தெரிந்தது.

வானொலி நிலையத்தாரும் இதுபோன்ற இலக்கிய 'பறக்ஞை' யுள்ள அறிவு வாலர்களும் முதலில் இவ்வாறு வேற்றுமொழி பேசி வீட்டுமொழி சிதைக்கும் வேண்டாத வேலையைவிட்டு விடவேண்டும்.

இவர்கள் நாம் சொல்வதைக் குறுகிய நோக்கமென்று குருட்டுத் தனமாகப் பேசி முகம் திருப்பிக் கொள்ளாமல் கேட்கவேண்டும்.

தங்கள் கூட்டுக்குப் புறத்தே புதுக்கிய பொலிவோடு பொங்கிவரும் தமிழ் உணர்வை இவர்கள் புரிந்துகொண்டு முதலில் இவர்கள் நல்லுணர்வு பெறட்டும்.

-சீராளன், கோட்டூர்.

[illegible]

மேல் குறிப்பிட்ட நாடுகளிலுள்ளோ அல்லது மொரீசியசிலுள்ளோ ஒரு சாரமைப்பாளர் எனத்தேர்ந்தெடுத்து ஓர் உயர் கட்டக் கருத்தறிவிப்பு நிறைவேற்றுக் குழுவினை அமைத்து அதன் மூலம் எல்லா உதவிகளையும் வழி நடத்தலாம்.

அடுத்து, மொரீசியசு, பீசி, இந்தோனேசியா முதலிய உரிமை நாடுகளில் வாழ்வோரின் குறைகளை அறிந்து கொள்ளுவதற்குத் தமிழக அரசு மேல் குறிப்பிட்டவாறு நன்கு ஆங்கிலம் அறிந்த ஒரு குமுக வாழ்வியல் வல்லுநரை அனுப்பி அவர் கொடுக்கும் அறிக்கை மூலம் உதவி புரியலாம்.

மூன்றாவதாக, தென்னாப்பிரிக்கா சிக்கலைத் தோற்றுவிக்கலாம். இந்தியப் பேரரசுக்கும் இந்நாட்டுக்கும் அரசியல் தொடர்பு கிடையாது. இதனை வேறு வழியில் சிந்தித்துச் செயலாற்றவேண்டும்.

தமிழக அரசு அண்ணா அரசு ஆட்சிக் காலந் தொட்டு இதுகாறும் அயல்நாட்டுத் தமிழர்கட்கு ஒவ்வொரு வகையில் உதவி செய்து வந்துள்ளது மறுக்க முடியாத உண்மை. நன்றிக்கடன் உடையோம். பாராட்டுகிறோம். ஆனால், இக்காலத்தில் உதவி என்பது பொருள் பொதிந்ததாக, பயன் உள்ளதாக இருக்கவேண்டும். இக்காலத்தில் மேற்கொள்ளப்படும் எச்செயலும் புள்ளி விளக்க அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும். நன்கு ஆராயப் பெற்ற, ஒருபால் சார்பற்ற, குறுகியகால, நீண்டகால, நோக்கு உடையதாய் இருந்தால்தான், ஆராயப்பெற்ற அறிவியல் அடிப்படையில் இருந்தால்தான் பயனளிக்கும். தமிழக மக்களின் வரிப்பணமும் வீணாகுதற்கு வழியில்லை.

இந்நாடுகட்கு அளிக்கப் பெறும் உதவி அந்நாட்டுத் தமிழரின் எண்ணம், குறிக்கோள் என்பன உணர்ந்தாலன்றி பயனளிக்காது. அன்றியும், இந்நாட்டுத் தமிழர் தமிழக, ஈழ, மலேசிய, சிங்கைத் தமிழர்களினின்றும், நடை, உடை, பழக்க வழக்கங்கள், சிந்தனைச் செயலாற்றல், குறிக்கோள், பண்பாடு முதலியவற்றால் வேறுபட்டவர் என்பதையும் மறந்துவிடலாகாது. எனவேதான் அவர்களின் தேவையை நன்கு உணர்ந்தே ஏற்ப உதவவேண்டும். நீண்டகால நோக்கு உடையதாய் உதவி இருக்க வேண்டும். என்பதால் மேல் கூறிய வல்லுநர்களின் கருத்துகள் மிகத் தேவையாகும்.

இன்னும், அவ்வப்போது இருவர் மூவர் அடங்கிய (ஆங்கிலமும் பிரஞ்சும் அறிந்த) கலைக்குழுக்கள் (British Council செய்வதுபோல), சமய, பண்பாட்டுச் சொற்பொழிவாளர் ஆகியோரை ஆண்டுக்கு ஒரு முறையேனும் இந்நாடுகட்கு அனுப்பித் தமிழரின் நாகரிகச் சிறப்பினையும், உள்ளப் பெருமிதத்தினையும் ஊட்டச் செய்யலாம்.

இந்நாடுகளில் தமிழின, தமிழ்ப் பண்பாட்டுப் பணி புரிந்து வரும் தமிழர்கட்குக் குறுகிய காலச் சுற்றுலா அழைப்பினை விடுத்து, அவர்கள் தம் மூதாதையர் தாய் நாட்டோடு உறவைப் புதுப்பித்துக் கொள்ள வழி வகுக்கலாம்.

மொரீசியசு, தென்னாப்பிரிக்கா நாடுகளில் தமிழ் மொழிப் பணியும் நடைபெற்றுவருவதால், இந்நாட்டுத் தமிழரின் மொழிப் பணியை ஊக்குவிக்கும் வகையில் இந்நாட்டுப் படைப்பு எழுத்தாளர்களைச் சிறப்பிக்க தமிழக அரசின் பாராட்டு, இவரது எழுத்து வெளியீடு எனப் பல்வழிகளில் ஊக்குவிக்கலாம்.

இங்கு நான் எழுதியுள்ளவற்றைத் தமிழகத்தில் நான் வதிந்த ஆறு ஆண்டுக் காலங்களில் ஆண்டி முதல் அரசன் வரை எடுத்துக் கூறியுள்ளேன்; பேசியுள்ளேன். தமிழகத் தமிழர் விழிப்புப் பெற்று அரசை வற்புறுத்தினால்தான் இவை நடைபெறும். பாவேந்தர் வரிகள் ஈண்டு நினைவுக்கு வருகின்றன.

"உதவாதினி ஒரு தாமதம்
உடனேவிழி தமிழா !"

உ. த. மு. க. உறவு மடல் தொடர்

## தமிழர்க்குத் தமிழே படை!

தோழமையுள்ளவர்க்கு,

இரண்டு அச்சிட்ட அறிவிப்புகள் அவை தமிழர், தமிழிலக்கியம் பற்றிக் கூறியுள்ளன. கருத்துகளை எடுத்து வைக்கிறேன்!

1. "கொத்தடிமைத் தமிழர்களுக்காகப் போராட அணிதிரள்வீர்"

2. "நேசக்கரம் நீட்டுங்கள்"

ஆந்திராவில் கைலாசபுரத்தில் ஒப்பந்தக் காரரால் சுரண்டப்படும் கொத்தடிமையாக அவலப்படும் தமிழர்களுக்காக மக்கள் உரிமைக் கழகம் விடுத்துள்ள அறை கூவல்!

"கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே" என்று கூறும் "மக்கள் கலை இலக்கியக் கழகம் இது" "மனஓசை" இதழைப் படிக்கவும், பரப்பவும் கேட்டுக் கொண்டுள்ளது!

சுரண்டலையும், பேடிமையையும் எதிர்த்து நிற்கும் தமிழர்கள் பார்வை இப்பொதுமை நோக்கிலிருந்து வழுவிச் செல்லாது என்பதை உலகறிய உணர்த்துவோம்!

அதே வேளை, தமிழர் நலங்கெடுக்கும் போக்கினை 'மக்கள் மொழி' என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டு 'கொச்சை மொழி' யளவுக்குத் தகுதியைத் தாழ்த்திக் கொள்ள விரும்புகிறவர்களை எச்சரிப்போம் எனவும் கூறிக் கொள்கின்றோம்.

தெளிவான கூரிய
சரியான சொற்களைக்
கையாளத் தமிழர்க்குத்
தமிழே படையெனக் காட்டுவோம்!

- பறம்பை அறிவன்.

"அண்ணே!"

"என்ன தம்பி?"

"திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கும் வ. வெ. சு. (அய்யர்) இலண்டன் சென்று படித்துவிட்டு வந்தவராமே!"

"ஆமாம்"

"அந்த மொழி பெயர்ப்புக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையில், திருவள்ளுவர் வீடுபேற்றைப்பற்றிக் கூறாமல் விட்டதற்குக் காரணியம் என்னவென்று சொல்கிறார் தெரியுமா?"

"சொல் தம்பி!"

"பிராமணரைத் தவிர வேறு யாரும் மெய்யுணர்வு பற்றிக் கூறும் ஆசிரியராக இருக்கக் கூடாது என்னும் வைதீக நெறிக்குத் திருவள்ளுவர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டாராம்!"

"அப்படியா எழுதியிருக்கிறார்!"

"ஆமாம். இலண்டன் சென்று படித்தாலும் மாசுகோ சென்று படித்தாலும் வ. வெ. சு போன்றோர் இயல்பு மாறவே மாறாதோ?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

- தமிழவேள்

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பண்பாடு குறித்து ஆங்கில வகுப்பு ஏன்?

'தமிழ் நிலம்' செய்தியாளர் - தஞ்சை.

20-12-82 - ஆம் பக்கலிலிருந்து ஆறு நாட்டுத் தமிழாசிரியர்களுக்குத் தமிழ்ப் பண்பாடு குறித்த ஓர் அறிமுகம் என்ற பயிற்சி வகுப்பு இன்று ஆங்கிலத்தில் தொடங்கப்பட்டது. ஒரு மாதம் இந்த வகுப்பு நடக்குமாம்.

அதன் துணைவேந்தர் முன்னிலையில், தமிழ்ப் பல்கலைக் கழக ஆளுநர், பேராசிரியர் சண்முக சுப்பிரமணியனார் திறப்புரையை ஆங்கிலத்தில் ஆற்றியதும், அயலகத் துறைப் பேராசிரியர் கு. நம்பி ஆரூரான் முன்னுரை ஆற்றியதும் அனைத்தும் ஆங்கிலம் விரிவுரை நிகழ்த்தியவர்களும் அப்படியே செய்தனர், தவறு தவறு!

ஏன் தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழில் இவ்வகுப்பை நடத்தவில்லை எனப் பயிற்சிக்கு வந்துள்ள தமிழர்கள் பதினெட்டுப் பேரும் வியப்புற்று வருந்தினர். தமிழிலேயே நடத்தினால் என்ன என்றும் சிலர் கேட்டது குறிப்பிடத்தக்கது?

தமிழ்ப் பண்பாடு குறித்துத் தமிழில் நடத்துவதற்கு ஏன் தமிழ்ப் பல்கலைக் கழகம் விரும்பவில்லை? இதன் முதல் திட்டமே இப்படி இருந்தால் தமிழகத்திற்கும், இப்பெரிய கல்வி நிலையத்திற்கும் எப்படி பெரிய மதிப்பு வெளிநாடுகளில் ஏற்படும், என அவர்களுக்குத் தெரியாதா? தமிழக அரசின் கல்வி அமைச்சு உடனே இது பற்றி ஆராய வேண்டும். நடவடிக்கை எடுக்குமா?

நன்கு தமிழில் பேசி உரையாடும், தமிழில் சிறந்த தேர்ச்சி பெற்று வந்தவர்களுக்கான வகுப்பையும், தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளையும் இவ்வாறு தேவையில்லாத மொழியில் அளந்து கொட்டுவதன் மூலம் இதன் குறிக்கோளையே பாழடித்து விட்டிருக்கிறார்கள்.

ஆய்வுக் கட்டுரைகளும் யாவும் தமிழாக இல்லை. ஆங்கிலமாகவே எல்லாம் உள்ளன? ஏன் இந்த நிலை?

தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் என்பதை ஆங்கிலமாக ஆக்கிவிடுவது தான் உள்நோக்கமா? இவர்கள் என்றுதான் திருந்துவார்களோ? நெஞ்சு பொறுக்குதில்லையே! இந்த நிலைகெட்ட மாந்தர்களை நினைத்துக் கொண்டால்!

o

## நியூசிலாந்து அருங்காட்சியகத்தில் தமிழ்எழுத்துப் பொறித்த மணி

நியூசிலாந்தின் பழுப்புநிற இனத்தவர் பயன்படுத்திய தமிழ் எழுத்துப் பொறித்த மணி ஒன்று அண்மையில் நியூசிலாந்தில் உள்ள வெலிங்டன் அருங்காட்சியகத்தில் இருப்பதை அறிந்து திரு. ஆர். முனியப்பன் அவர்கள் (குவாம் பல்கலைக்கழகத் துணைத் தாளாளர்) 18-12-82 நாளிட்ட இந்து நாளிதழில் மடல் ஒன்று எழுதியுள்ளார்.

அதில் குறிப்பிட்டிருப்பதாவது:— இந்த மணி 1830-இல் நியூசிலாந்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த மறைத்திரு வில்லியம் கொலன்சோ என்கிறவரால் கண்டெடுக்கப்பட்டது அதில் எழுதப் பெற்றிருக்கும் தமிழ்வரியின் மொழிபெயர்ப்பாக மொகய்தீன் பக்கின் கப்பல் மணி—என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நியூசிலாந்தில் உள்ள வரலாற்று அறிஞர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும், இது தொடர்பாகத் தமிழ் வரலாற்று அறிஞர்களிடமிருந்து தகவல் பெற விழைவதாகவும், அது இம் மணியின் வரலாற்றைத் தெரிந்துக்கொள்ள உதவியாக இருக்குமென்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

இத் 'தமிழ்' மணித் தொடர்பாகப் பெறப்படும் செய்திகள் நியூசிலாந்து வரலாற்றை மட்டுமின்றித் தமிழர் வாணிக வரலாற்றையும் அறிந்துகொள்ளவும் உதவியாக இருக்குமென்று தாம் நம்புவதாகவும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

## அரவத்திற்கு முத்தமா!

முன்னாலே பேசுகின்ற பேச்சு; தூய
முல்லைப்பூ வனப்பாக உள்ள தென்று
முன்பின்நீ சிந்தியாமல் நட்புக் கொண்டு
முழுமையாக நம்பிவிட்டாய்; ஆனால் உன்றன்
பின்னாலே பேசுகின்ற பேச்சோ உன்மேல்
பெருங்குற்றஞ் சாட்டிநிற்கும்; இஃதறிந்தும்
முன்னாலே பழகியதை எண்ணி நெஞ்சே!
முள்ளின்மேல் நடந்திடவே விழையலாமோ?

இருள்விலக்கும் சுடர்விளக்காய் இடரைப் போக்கும்
இன்மொழிதான் இருக்குமென்று நினைத்த தல்லால்
பொருளுதவி கிடைக்குமென்று விரும்ப வில்லை;
புறங்கூறிப் பழியுன் மேல் சுமத்திப் பார்க்க
விரும்புவோன்கண் பழகிவிட்ட காரணி யத்தால்
வெறுத்(து)அவனை ஒதுக்கிடாமல் இருக்க லாமோ?
உருள்கல்லால் மிதிபட்டே நசுங்க லாமோ?
உறுதுயரைத் தீயவனால் அடைய லாமோ?

தனக்குமட்டும் இருந்திட்டால் போதா தென்று
தங்கமென நீயிருக்க விருப்பங் கொள்ளத்
தனக்குமட்டும் இருந்திட்டால் போது மென்று
தகாப்பண்பு கொண்டிருக்கும் கார ணத்தால்
இனம்பெருக்கும் புறஞ்சொல்லை விரும்பி நாளும்
தேனென்னவே உடனிருந்தே பேசுந் தீயோன்
இனத்தவனாய் இருப்பதாலே என்றன் நெஞ்சே!
இன்சுவையை வேம்பிடத்துத் தேட லாமோ?

தொழில்துறையில் பயன்தனக்குக் கிட்ட வேண்டித்
தூயநெறிக் கொள்கையினைக் கொண்டி டாமல்
இழிசெயலைப் புரிவதற்கும், புறஞ்சொல் நாளும்
இயம்புதற்கும் தயக்கமொன்றுங் கொள்ளா இந்த
மொழியுணர்வே சிறிதுமிலான் தொடர்பை நெஞ்சே!
முழுநிலவாய் எண்ணுவது நன்றோ? இந்தக்
கழிசடையால் குமுகாயம் நலமா கொள்ளும்?
கயமைநிறை நரியிடமா நேர்மை தோன்றும்?

இனங்காட்டி வாழுகின்ற நரியின் கூட்டம்
இருக்கலாமோ குமுகாயப் பூங்காக் குள்ளே?
இனங்காட்டி வாழுமிந்த நரியின் காலை
எந்நாளும் அழுத்துவோனைக் காணும் போது
சினங்காட்டிப் பேசிடாமல் முல்லை போன்று
சிரிப்பூட்டிப் பேசுதற்கோ எண்ணந் தோன்றும்?
அனல்காட்டில் அழித்திடாமல் என்றன் நெஞ்சே!
அரவத்தை முத்தமிட்டுக் கொஞ்ச லாமோ?

வீ. வில்வநாதன், வெங்காளூர்-16

(முதல் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அங்கே என்ன வேலை? ஆங்கிலப் பள்ளிகள் பெருகி விட்டன. ஆங்கிலப் பள்ளியில் பயில்பவர்கள் இரண்டாம் மொழியாக இந்தியைக் கற்கிறார்கள். தமிழ்க் கல்வி கற்கும் பிற்காலத் தமிழர்களின் நிலை என்ன? ஒட்டுமொத்தமாகத் தமிழில் கல்வி வரவேண்டும். இல்லையேல் தமிழர்களாவது முன்னேறி வாழ வேண்டும். அதற்குச் சரியான முடிவு எடுத்தாக வேண்டும். உடனே எடுத்தாகவேண்டும்' என்று உணர்ச்சிப் பெருக்கோடு அடிகளார் பல்வேறு கேள்விகளுக்கு விடை கூறினார்.

''விடுதலையே அதற்கு வழியா?'' என்றபோது

''உரிமைக்குப் பாதுகாப்புள்ள ஒரு கூட்டாட்சி தேவை. ஆசாமியரும், சீக்கியர்களும், ஒட்டுமொத்தமாகக் கிளர்ந்து எழுகிறார்கள். ஆனால் தமிழர்கள்...?'' என்ற அடிகளார் மேலும் கூறினார், ''நம்மிடையே உள்ளீட்டின சூழல் இருக்கிறது. பிரித்தாளும் சூழ்ச்சி நிலவுகிறது. ஒரு குமுகாயத்தினர் (பார்ப்பனர்) நம்மில் மாறுபட்டவர்களாகவே இருக்கிறார்கள். பிரிந்து வாழ்வதைவிட உரிமை பாதுகாக்கப்பட்ட ஒன்றிய குமுகாய'' அமைப்பே சிறந்தது என்று கருதுகிறேன்.

''மாறுபட்ட குமுகாய அமைப்பினருக்கு ஒரு தனி நிலம், தனிமொழி என்று இல்லை. காலத்திற்கு ஏற்ப, தங்கள் வாழ்வேந்துகளுக்கு ஏற்ப மொழியை அவர்கள் கைக்கொள்ளுகிறார்கள். தமிழையே தாய்மொழியாகக் கொண்டு, ஒரு காலத்தில நாகரிகம் பெற்றவர்கள அவர்கள் பின் வாழ்வியல் சிறப்பிற்கு ஆங்கிலத்தைக் கையாண்டார்கள். இடைக் காலத்தில் தமிழர்களின் அறிவை மயக்கித் தங்களை மேம்படுத்திக்கொள்ள வட மொழியைக் கையாண்டார்கள். சமற்கிருதத்தை அவர்கள் வேண்டுமென்றே உயர்த்த நினைக்கிறார்கள். தாங்கள் தமிழ்க் குமுகாயத்தில் சிறிது மாறுபட்டவர்கள் என்று காட்டிக் கொள்ளவே அதைக் கையாளுகிறார்கள் என்று கருதுகிறேன். அதற்கு ஒரு மொழி அவர்களுக்குத் தேவைப்படுகுறது தமிழ்க் குமுகாயத்தின் ஒன்றிய சூழலில் வாழும் அவர்கள் தங்களைத் தனித்து உயர்த்திக் கொள்வதே நோக்கம். அவர்களிடம் தனிக் கொள்கை கோட்பாடு கிடையாது. பொருளியல் சார்ந்த வாழ்வியல் வளமையே அவர்கள் தலையாய குறிக்கோள். பல நூறு ஆண்டுகளாகவே அவர்கள் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளாமல் தமிழர்கள் இருந்து விட்டார்கள்' இனி இந்நாட்டில் இருந்து அவர்கள் வெளியேற மாட்டார்கள்' அதேபொழுது தங்களை உயர்த்திக் கொள்ள மற்றவர்களைப் பிரித்து வைத்துத் தாழ்ந்து கிடக்கச் செய்வதையே உள்ளீடாகச் செய்து வருவார்கள் அதற்கு ஒரே முடிவு அவர்களைத் தமிழர்களோடு தமிழர்களாக இரண்டறக் கலக்க வைப்பதே ஆகும். சிலர் விடுபட்டு மற்ற இடங்களுக்குச் சென்றால் விட்டு விடலாம். தமிழ்நாட்டில் வாழ நினைப்பவர்கள் தமிழர் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்' அதற்கு அடிகளின் அன்புவழி மட்டும் போதாது; மாற்றுவழியும் தேவைப்படும்'' என்று கருத்துக் கூறியபோது அடிகளார் ஆர்வமுடன் செவிமடுத்தார். முகத்தில் முறுவல் காட்டினார்.

''தாங்கள் இக்கருத்தைப் பரப்புதல் வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டபோது, தலையசைத்தார்.

''நாங்களும் (உ.த.மு.க) அதற்காகப் பாடுபடுவோம்.' என்று கூறியபோது, முகத்தில் மகிழ்ச்சி கூட்டினார்,

விடைபெற்றோம்.

அடிகளார் மகிழ்வோடு விடைகொடுத்தார்.

# கேளுங்கள் விடை சொல்கிறோம்

**தென்னவன்,**
தூத்துக்குடி.

(?) மூன்று விழுக்காடு உள்ள பார்ப்பனர்கள் பூணூலை அகற்றுவதை விட, தொண்ணூறு விழுக்காடு உள்ள தமிழ் மக்கள் பூணூல் அணிவதுதான் எளிது என்று கூறும் 'பார்ப்பன' 'சோ'வுக்குத் தங்கள் விடை யாது?

(!) முதலில் 'சோ'வுக்குப் பார்ப்பனியத்தை நிலை நிறுத்துவதே உள்நோக்கம் என்று வெளிப்படையாகத் தெரிகிறது. அடுத்து பூணூல் அணிவது தேவை தானா என்று எண்ணிப் பார்க்க அவர் மறுக்கிறார். இஃது அவர் பார்ப்பனியப் பற்றைக் காட்டுகிறது. இனி, மூன்று பேர் நடைமுறையை மாற்றுவதை விட, 97 பேர்களின் நடைமுறையை மாற்றுவது எளிது என்கிறார். இஃது அவரின் அறியாமையைக் காட்டுகிறது. இறுதியாக மூன்று பேர் ஏற்கனவே அணிந்த பூணூலைக் கழற்றியெறிவதற்கு ஆகும் செலவு ஒன்றுமில்லை. 97 பேர் பூணூல் அணிவதற்குக் கூடுதல் செலவு ஆகும். என்பதை அவர் அறியவில்லை. இஃது அவர் பொருளியல் அறிவின்மையைக் காட்டுகிறது.

**க. ஆறுமுகம்,**
பெங்களூர்-21

(?) திரு வேதாசலம் 'மறைமலையடிகள்' ஆன பொழுது, திரு. சூரியநாராயண சாத்திரியார் பரிதிமாற்கலைஞர் ஆனபொழுது, தூய தமிழ் நெஞ்சங்கள் அவர்களின் தனித்தமிழ்ப் பற்றினை எண்ணி, உள்ளம் உவகையுற்றன. ஆனால், திரு. மு. கருணாநிதி இன்றுவரை தம் பெயரை வடமொழியிலேயே வைத்துக் கொண்டுள்ளாரே! மாற்றம் கோரி வினவினால் சிக்கல் உள்ளது என்று மழுப்புகிறாரே!

(!) மறைமலையடிகளும், பரிதிமாற்கலைஞரும் தம் தம் அளவில் நன்று, தமிழுக்கு உழைத்தவர்கள். கலைஞர் பொதுவாழ்வோடு-அரசியலோடு-தம்மை இணைத்துக் கொண்டு, தமிழுக்கு மட்டுமின்றி, தமிழ் இனத்திற்கும், நாட்டிற்கும் உழைத்தவர்; உழைத்து வருபவர். பெயர் மாற்றம் ஒன்றே ஒருவர்க்கு முழுத் தகுதியையும் ஏற்படுத்தி விடாது. உழைப்பையும் பார்க்கவேண்டும். எனவே பெயர் மாற்றிக் கொள்ளாதது கலைஞர்க்கு இழுக்கு ஆகாது. மாற்றிக் கொண்டால் அவர்க்கு இன்னும் பெருமையே!

**சிவமணி,** அமரர் பூண்டி.

(?) கழங்கு, அம்மனை, கந்துகம் என்பவற்றின் பொருள் என்ன?

(!) **கழங்கு** - கழற்காயைக் கொண்டு விளையாடும் ஒரு வகை விளையாட்டு; **அம்மனை** சிறுசிறு கூழாங்கற்களைக்கொண்டு விளையாடும் ஒரு வகை விளையாட்டு; **கந்துகம்**-பெண்கள் கைகளால் விளையாடும் கையடக்கமான பந்து.

**மா. இளங்கோ,** குளிபிறை

(?) 'தமிழ் நிலத்'தில், தமிழர் பண்பாடு, கலை முதலானவற்றை முகாமையாகக் கொண்ட (தற்பொழுது தமிழில் உள்ள) கதைகள், நெடுங்கதைகள் மற்றும் வீரஞ்செறிந்த வரலாறுகளை (தூய தமிழில்மாற்றம்செய்து) வெளியிடுவீர்களா?

(!) கதைகள், கற்பனைகள் பேசிப் பேசியே தமிழினப் பெருமைகள் அனைத்தும் குலைந்து போயின. இன்றும் கதை எழுதுபவர்களாலேயே தமிழ்நாடு சீரழிகின்றது. கற்பனைக் கதைகளில் மனம் பறிபோவதைத் தடுத்து, உண்மை வாழ்வியலில் மக்கள் நாட்டம் செலுத்துவதையே 'தமிழ் நிலம்' விரும்புகிறது. நீங்களும் அதுபோலத் தான் சிந்திக்க வேண்டும்.

## அன்பர்கள் கவனிக்க!

எதிர்பாராத வகையில் நாளிகை (நாள் காட்டி) யின் உருவாக்கச் செலவு, கூடிவிட்டதால், அடக்க விலைக்கே கொடுக்க வேண்டும் என்று விரும்பியும், தனி நாளிகை ஒன்றுக்கு **உருபா ஐந்து** என்று விலை குறிக்க வேண்டியதாகப்போய்விட்டதற்குப் பெரிதும் வருந்துகிறோம்.

உரு. 4-25 மேனி பணம் விடுத்த அன்பர்கள் தாங்கள் விரும்பும் எண்ணிக்கைக்குஉரிய தொகையை உரு. 5 மேனி கணக்கிட்டு, எச்சத் தொகையினை உடனே விடுத்து வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வகையில் நேர்ந்த விலை மாற்றத்திற்கும், காலத்தாழ்த்தத்திற்கும் அன்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

சென்னை-5.
5—1—83.

அமைச்சர்
தமிழ் நிலம்

## 'தமிழ் நிலம்' அஞ்சல் காலத்தாழ்த்தம் தொடர்பாக அன்பர்களுக்கு விளக்கம்

'தமிழ் நிலம்', காலத்தாழ்வாக அஞ்சலில் வெளியூர்களுக்கு வந்துசேர்வதாகப் அன்பர்கள் பலர் கடிந்தும், வருந்தியும் மடல் எழுதியுள்ளனர். சென்னையில் வெள்ளியன்று அச்சிட்டுவரும் 'தமிழ் நிலம்' காரியன்று வெளியூர் முகவர்களுக்கு அஞ்சலில் சேர்க்கப் பெறுகிறது. அவ்வாறு சேர்க்கப்பெறும், 'அஞ்சல்' அஞ்சலகப் பிரிப்பகத்திற்குச் சென்று முத்திரையிடப்பட்டு, விடுக்கப் பெறுவதில் காலத்தாழ்த்தம் ஏற்படுவதாக அறிகிறோம். இது தொடர்பாக அண்மையில் சென்னை நகர அஞ்சல்துறைத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், கடுமையான மின்வெட்டு கரணியமாகவும், அதனால் அளவீட்டுப் பணியாளர்களின் (Time Clerks) பணியில் ஏற்படும் இடையூறு கரணியமாகவும் அஞ்சல்கள் வெளியூர்களுக்கு அனுப்புவதில் ஏற்படும் காலத்தாழ்த்தத்திற்குப் பொறுத்துக் கொள்ளுமாறுகேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே 'தமிழ் நிலம்' உரிய நாளில் கிடைக்கப் பெறாமல் மிகவும் காலந்தாழ்த்திக் கிடைக்கப் பெறுவதற்காக வருந்துகிறோம். 'தமிழ் நிலம்' இதழ்களை இங்கு வெள்ளியன்று இரவே முகவர்களுக்கு கட்டுக்கட்டி, காரியன்று காலையே அஞ்சலில் சேர்த்துவிடுகின்றோம். இதழ் விடுப்பதில் நாம் செப்பமாகச் செயல்படுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏற்படும் காலத்தாழ்விற்கு முழுக்க அஞ்சலப் பொறுப்பே என்பதை அறிக. அன்பர்கள் காலத்தாழ்வினைப் பொறுத்துக்கொண்டு இதழ் விற்பனையில் தொய்வின்றி ஆர்வம் காட்டிட வேண்டுகின்றோம். 'தமிழ் நிலம்' தமிழர்களின் கைகளில் தவழுமாறு செய்வது நம்மின் தலையாய கடமை என்பதை உணர்ந்து செயல்படக் கேட்டுக் கொள்கிறோம். மின்தடை கரணியமாக ஏற்படும் இதழ் காலத்தாழ்வினை மின்தடை நீக்கம்வரை பொறுத்துக் கொள்ளுமாறு அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அமைச்சர்
''தமிழ் நலம்''

### உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.